# அருளமுதம்



களுத்துறை மாவட்ட அருள்நெறி விழா

## சிறப்பு மலர்

மத்துகம நகர மண்டபம்

1999 ஆகஸ்ட் 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறி கீதம்

இராகம் – மாண்டு                                        தாளம் – ஆதி

(எடுப்பு)

தொன்னெறி அறங்கள் துளங்கிடும் ஞான
உண்மைகள் அனைத்தும் உணர்வோமே!

(தொடுப்பு)

அன்புடன் அருளும் அமைந்தநல் வாழ்வை
அறநெறி வழியில் அமைப்போமே!

(முடிப்பு)

தூய்மையும் தியானமும் சொல்லிய ஞானியர்
வாய்மையின் வழிகளை வளர்ப்போமே!
ஆயநாற் பாதமும் ஆகம வேதமும்
ஆன்மநன் னேயமும் அறிவோமே!

ஆலயம் போற்றிநல் நோன்புகள் நோற்கவும்
அடியராய்ப் பணிசெய்ய அறிவோம்!
சாலவும் இறைநாமம் கூடியே பாடவும்

சாத்திர ஆற்றலும் பெறுவோமே!
நாளை உலகினில் நல்லவர் என்றிடும்
நாமம் பெற்றிடப் பயில்வோமே!
தீதும் நன்றும் யாதெனத் தேரும்
திறமைகள் அனைத்தும் பெறுவோமே!

ஒன்றே குலமென ஒருவனே இறையென
உலகுக் குரைத்திட எழுவோமே!
நன்றே நினைத்திட நன்றே புரிந்திட
நல்லவை கற்றுத் தெளிவோமே!

அறநெறி – இறைபணி – ஆவதே – எம்பணி – //
அனைவரும் உணர்ந்திடும் வகையினில் உழைத்திட
அத்தன் திருவடி நித்தம் பணிந்து நாம் (தொன்னெறி)

இயற்றியவர் : **கலாஜோதி: குமார இராமநாதன்**
இசை : **கலாபூஷணம் திருமதி. ஷாமினி இராமநாதன்**

*அறநெறி கீதம் 1996ம் ஆண்டு அருள்நெறி விழாவில்
சென்னை இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஸ்ரீமத் கமலாத்மாநந்த மகராஜ்
அவர்கள் முன்னிலையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளமுதம்
# 99"

கழுத்துறை மாவட்ட
அருள்நெறி விழா

## சிறப்பு மலர்

**29 — 08 — 1999**

**இந்து இளைஞர் மன்றம்**
**வேலாபுரம்**

இல. 105, பழைய வீதி
களுத்துறை தெற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்ட அருள்நெறி விழாவிற்கு

எமது வாழ்த்துக்கள்

# Lulu Jewellery Centre

DEALERS IN 22KT. SOVEREIGN GOLD JEWELLERY

**09, NEW MARKET, AGALAWATTA ROAD,
MATUGAMA**

# லூலு ஜுவலரி சென்டர்

*தங்க நகை செய்பவர்கள்*

**மத்துகம நகரத்தில் தங்க நகைகளுக்கான
ஓர் புரட்சி!**

தங்க நகைகளை நவீன இயந்திரங்கள்
துணையுடன் நவீன முறையில் செய்து கொள்ள
இதோ நாங்கள் தரும் சலுகைகள்

- வளையல், மோதிரம் 15 நிமிடங்களில் செய்து தரப்படும்.
- எங்களிடம் செய்துகொண்ட நகைகளை, பழுதுபார்க்கவோ, மெருகூட்டவோ இலவசம்.
- எங்களிடம் நகை செய்து கொண்டவர்களின் விசேட வைபவங்களை இலவசமாக வீடியோ செய்து தரப்படும்

**இல.09, புதிய சந்தை கட்டிடம்
அகலவத்தை வீதி - மத்துகம**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



களுத்துறை இந்து இளைஞர் மன்றம், இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும் களுத்துறை மாவட்ட அருள்நெறி விழா எதிர்வரும் 29.08.99 அன்று நடைபெற இருப்பதாக அறிகிறோம்.

'தர்மோ ரக்ஷதி ரக்ஷ:' என்று வடமொழியில் ஒரு வாக்கியம் உண்டு. அதன் பொருளாவது 'தர்மத்தை வாழ்க்கையில் கடைபிடிப்பவனை தர்மம் தலைகாக்கும்' என்பதாம். சமயம், வாழ்க்கைக்கான உயர்ந்த தர்மங்களை போதிக்கின்றது. பல தலைசிறந்த தர்மவான்களை நமது சமய வரலாற்றிலே காணலாம். இறைவனை நேசிக்க வேண்டும். அவ்வாறே அவனது பிறப்புக்களாகிய மக்களையும், ஏன் அனைத்து ஜீவராசிகளையும் நேசிக்க வேண்டும். இதுவே நமது சமயம் கூறும் உயர்ந்த தர்மம். இந்த உயர்ந்த தர்மத்தைக் கடைப்பிடிக்க ஒழுக்கம் அவசியமாகிறது. ஒழுக்கமில்லாத மனிதன் எவ்வளவுதான் சமய சின்னங்களை அணிந்தாலும், கோயிலுக்குச் சென்றாலும், சமய விழாக்களைக் கொண்டாடினாலும், அனைத்தும் வீணே எனவே முதலில் ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். பின்னர் இறைபக்தி தானாக வந்து அமையும்.

இன்று நமது சமுதாயத்திலே ஒழுக்கமின்மை அதிகரித்து வருவதை யாரும் மறுக்க இயலாது. இதற்கு யார் காரணம் என்று ஆராய்வதைவிட, ஒழுக்கத்தை நமது வாழ்க்கையில் கடைபிடிக்க முயற்சிப்பதே மேலானது. பொய் சொல்லாமை, களவு செய்யாமை, பிறரை துன்புறுத்தாமை, கள்ளுண்ணாமை போன்ற பல பண்புகள் ஒழுக்கத்தை நிர்மாணிக்கின்றன. தினசரி காலையிலும் மாலையிலும் இறைவனை வழிபடுதல், அவனது நாமத்தைக் கூறல், தியானித்தல், நல்ல நூல்களை வாசித்தல் போன்ற நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொண்டால், சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் குடி, போதைப்பொருள், சினிமா போன்ற தீமைகளின் தாக்கத்திலிருந்து தப்பலாம். எந்த அளவிற்கு வேகமாக இந்த நல்ல செயற்பாடுகளில் ஈடுபடுகிறோமோ அந்த அளவிற்கு நமது வாழ்க்கையும் சமுதாய வாழ்க்கையும் சிறப்புடன் அமையும் என்பதில் ஐயமில்லை.

களுத்துறை இந்து இளைஞர் மன்றத்தினருக்கும், அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினருக்கும், இத்தருணத்தில் எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– சுவாமி ஆத்மகனாநந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# Prince Studio & Colour Laboratory (Pvt) Ltd.

*Head Office:*
Main Street, Kalutara South. Tel: 034-22114

*Branches:* Galle Road, Kaluwamodara, Aluthgama. Tel: 034-75365
No. 49, Sarananda Mawatha, Kalutara South. 075-581270
Reverina Hotel Beruwela, Sri Lanka. 034-76044
Neboda Road. Matugama.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
ஸ்ரீ குருப்யோ நம



# வாழ்த்துரை

பேரன்புடைய பெருந்தகையீர்!

உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்
ஓம் நம சிவாய

களுத்துறை இந்து இளைஞர் மன்றம் இந்து ஸமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுஸரணையுடன் நடாத்தும் 'களுத்துறை மாவட்ட அருள் நெறி விழா' எதிர்வரும் 29.08.1999 அன்று நடைபெற இருப்பதாக அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

மனித மனம் மூன்று நிலைகளை உடையது. உளவியலார் இம்மூன்று நிலைகளை மேல் மனம், நடு மனம், ஆழ் மனம் அல்லது அடி மனம் எனப் பகிருவர். புறவாழ்க்கைத் தரத்தை செம்மைப்படுத்திக் கொள்வதால் மேல் மனம் மேலெழுந்தவாரியாக நிறைவு பெற்றதாக உணரும். அறநெறியில் ஈடுபடுவோரது நடுமனம் மேலும் நிறைவை உணரும். மெய்ப்பொருளை நன்கு அறிவதால் ஆழ்மனம் முழுமையான அமைதியினை உணரும். சமயங்கள் நடுமனதையும், ஆழ்மனதையும் அமைதி பெறச் செய்யச் சிறந்த நல்வழிகளை அருளி இருக்கின்றன.. மனித சமுதாயம் உள்ளவரை இச்சமயங்கள் மனிதப் பிறவியை நன்கு பயன்படுத்துவதற்கு என்றென்றும் உறுதுணை புரியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. 'பிறவியின் நோக்கம் யாது?' என்பதைத் திருமூலர் இங்ஙனம் தெளிவுபடுத்தியுள்ளார்.

'பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரானடி பேணார்
பெறுதற்கரிய பிராணிகளெல்லாம்
பெறுதற்கரிய பேறிழந்தாரே'

இதனை நன்கு உணர்ந்த களுத்துறை இந்து இளைஞர் மன்றம், இந்து சமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுஸரணையுடன் அருள் நெறி விழாவினை நிகழ்த்தி அதன் வாயிலாக மக்களுக்குப் பிறவியின் தலையாய பணியை வலியுறுத்த விரும்புகிறது. 'அருள் நெறி விழா' சீரும் சிறப்புமாய் திகழ, உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரிய தனக்குவமை இல்லாத எண் குணத்தானின் திருவடிகளைப் பணிந்து போற்றி வணங்கி உளமார வாழ்த்துகின்றோம்

மெய் விரும்பிய அன்பர் விளங்குக!
குவலயம் முழுதும் வாழ்க!
ஓம் நம சிவாய

பேரன்புடன் கூடிய உளம் கனிந்த நல்வாழ்த்துக்களுடன்

ஸ்வாமி ஓங்காரானந்த

(ஸ்வாமி ஓங்காரானந்த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி விழா சிறப்புற

எமது நல்வாழ்த்துக்கள்

Sankavi

Jewellery

සංකවි ජුවලරි

சங்கவி ஜுவலரி

GENUINE 22CT GOLD JEWELLERY

4/A, VAUXHALL STREET,
COLOMBO 2.

Tel: 01-472762

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



**புளத்சிங்கள**

**ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய**

**பிரதம குருவின்**

## ஆசிச் செய்தி

*களுத்துறை மாவட்ட இந்து அருள் நெறி விழாவிற்கு எனது நல்லாசிகளை வழங்குவதில் மிகுந்த மகிழ்வடைகின்றேன்.*

*எமது நாட்டில் பழங்காலந்தொட்டே ஆலயங்கள் கலை பொக்கிஷங்களாக திகழ்ந்து வருகின்றன. பண்ணும், கலையும் ஆலயங்களிலிருந்தே வளர்ந்து வருகின்றன. மனித வாழ்க்கை பயனுள்ள முறையில் அமைய அறிவு மட்டும் இருந்தால் போதாது, அத்தோடு கூடிய சமய அறிவும் இன்னும் முக்கியமாக இறை ஈடுபாடும் மிக்க அவசியம் என்பதை யாரும் மறுக்க இயலாது, பாமரனை பண்புள்ளவனாக்கி பண்புள்ளவனைத் தெய்வீக நிலைக்கு உயர்த்த வல்லது. இறையுணர்வு அத்தகைய இறையுணர்வை வளர்ப்பதுதான் அறநெறி பாடசாலையின் முக்கிய நோக்கமாகும்.*

*இத்தகைய நற்பணிகள் எமது சமுதாயத்தை இன்னும் ஆழமான இறை நம்பிக்கைக்கு இட்டு செல்லும் இன்றைய தலைமுறையினர் இவற்றின் இசை, பொருள் போன்றவற்றில் ஈடுபடவும் வழிவகுக்கும். மென்மேலும் அறநெறி சிறப்புற்று விளங்கவும் எமது இந்துசமயம் ஓங்கி வளரவும், களுத்துறை மாவட்டத்தில் இந்துசமய நற்பணிகள் சிறந்து விளங்கி, மக்கள் மனதில் மறவா நற்பணி என கருதி ஒத்தாசை நல்க வேண்டும் என்று ஆசீர்வதிக்கின்றேன்.*

**ஆர். அருள்நேசன்**
**பிரதம குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி விழாவிற்கு

எனது நல் வாழ்த்துக்கள்

NIROJANI

WORK SHOP

නිරෝජනි
ආභරණ සාදන්නෝ

நிரோஜனி
வேர்க் சொப்

ALL ARTICLES ARE GUARANTEED & GENUINE

No. 297, (inside)
Sea Street,
Colombo - 11.

Tel: 341715

නො: 297, :ඇතුල්පිට
හෙට්ටි වීදිය
කොළඹ 11.

அருள்நெறி விழாவிற்கு

எனது நல் வாழ்த்துக்கள்

AJANTHAN Jewellery

MANUFACTURERS OF GOLD JEWELLERY

அஜந்தன்
ஜுவலரி

අජන්තන්
ජුවලරි

188/190 B1, SEA STREET, COLOMBO 11.

Tel: 452471

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



**களுத்துறை**

**ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்**

**பிரதம குரு**

**ஈசான சிவாச்சாரியார்,**

**கிரியாகலாப முக்தாமணி**

**சிவஸ்ரீ வெ. சுப்பிரமணியக்**

**குருக்கள் அவர்களின்**

## ஆசிச் செய்தி

இலங்கையின் மேல் மாகாணமான களுத்துறை மாவட்டத்தில் அருள் நெறி விழா நடப்பதை அறிந்து பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இளம் சமுதாயத்தின் மத்தியில் சமயப்பற்றும் இந்து கலாசாரமும், இறை நம்பிக்கையும், ஏற்படுத்த கூடிய வகையில் அமையும் இவ்விழாவையிட்டு அனைத்து இந்து மக்களுக்கும் மன மகிழ்ச்சியைத் தருகின்றது.

சமயப்பற்று, இறைநம்பிக்கை, இந்து கலாசாரம் மருகி வரும் இக்காலக்கட்டத்தில் இவ்வகையான பெரும் விழாக்கள் நடைபெறுவது சகல இந்து மக்களாலும் மிக வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

இம்மாதிரியான விழாக்களை நடத்தி இந்து சமுதாயத்தையும், சமயப்பற்றும், இறைநம்பிக்கையும் பண்பாட்டையும், ஊக்குவிப்பதில் அரும் பணியாற்றி வரும் **இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தையும்** களுத்துறை மாவட்ட அறநெறி பாடசாலைகளுக்கான இணைப்பாளர் **திரு எஸ்.ரி. சதாசிவம்** அவர்களையும் இத்தருணத்தில் பாராட்டப்பட வேண்டும்.

அருள் நெறி விழாவில் வெளியிடப்படும் இச் சிறப்பான மலர் எல்லோருக்கும் பயன் படக் கூடியதாக அமையவும், ஏனையோர் நற்பெருவாழ்வு வாழவும், எல்லாம் வல்ல இறைவன் **ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியை பிரார்த்தித்து** எனது நல்லாசிகளையும், தெரிவித்துக் கொள்கின்றேன்

லோகா சமஸ்தா சுகினோ பவந்து

**வெ. சுப்பிரமணியக் குருக்கள்**
பிரதம குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி விழாவிற்கு

எனது நல் வாழ்த்துக்கள்

கே. நந்தகுமார்
குளோடன் தோட்டம்
புதிய பிரிவு
நேபொட

அருள்நெறி விழாவிற்கு

எனது நல் வாழ்த்துக்கள்

தேவி கோல்ட் ஹவுஸ்

Devi
Gold House
10, Colombo Road,
Kaluwella, Galle

දේවි
ගෝල්ඩ් හවුස්
10. කොළඹ පාර.
කළුවැල්ල - ගාල්ල

10, கொழும்பு வீதி, களுவெல்ல-காலி

JEWELLERS & GEM MERCHANTS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பணிகள் சிறப்புறட்டும் வாழ்த்துச் செய்தி

இன்றைய இக்கட்டான சூழலிலும் எல்லோரும் இன்பமாக வாழ விரும்புகின்றனர். இதயத் தூய்மையுடன் இறைவனை வழிபடுபவர்கள் இன்பமாக வாழ்கின்றனர்.

ஆன்மீக சிந்தனைகளிலும் செயல்முறைகளிலும் ஈடுபடும்போது இதயத்தூய்மை ஏற்படுகின்றது. இந்து இளைஞர் மன்றம் போன்ற சமய, சமூக அமைப்புக்கள் ஆன்மீக சிந்தனை செயற்பாடுகளில் ஈடுபட ஒவ்வொருவரையும் தூண்டுகின்றது. களுத்துறை இந்து இளைஞர் மன்றம் மக்களின் நல்வாழ்வுக்கு பணிகள் பலவற்றை ஆற்றிவருவதோடு, சிறப்புப் பணியாக அருள் நெறிவிழாவினை நடாத்துவதும் அதனையொட்டி 'அருளமுதம்' சிறப்பு மலர் வெளியிடுவதும் பாராட்டப்பட வேண்டிய முயற்சிகளாகும்.

களுத்துறை இந்து இளைஞர் மன்றப் பணிகள் யாவும் சிறப்புறவும் இறைவனின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்கவும், இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**எஸ். தில்லை நடராஜா**
பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்ட அருள் நெறி விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்



பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா

*பிரதி சனி ஞாயிறு தினங்களில்*
*மத்துகமயில்*
*தமிழ் வகுப்புக்கள்*



*ஆண்டு 9, 10, 11, மாணவர்களுக்கான*
*கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கணக்கியல் தமிழ்,*
*சமூகக்கல்வி மற்றும் சமய பாடங்கள்.*

**ஜெயா கல்வி நிலையம்**

**473/1, அகலவத்தை வீதி,**

**வேத்தேவ-மத்துகம**

ஆசிரியர்கள்:

**திரு. கே. ஜெயசந்திரன் - திரு.கே. இரவிச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரியின் சிறப்பு

~ வே. யசராஜா ~ கொடஹேனை சைவ நற்பணிமன்றம்

இறைவனுக்கு உரிய விழாக்களைச் செய்ய அனைத்து நாட்களும் உகந்தனவே. எனினும் ஒவ்வொரு திருமூர்த்தங்களுக்கும் உகந்த நாட்களாகச் சில நாட்கள் ஒதுக்கப்பட்டு, அந்நாளில் விழாவைச் செய்வது சிறப்புடையதாகச் சான்றோர்களால் கூறப்பெறும். இம்முறையில் சிவனுக்குச் சிவராத்திரியன்றும், சக்திக்கு நவராத்திரியின் போதும் திருமாலுக்கு வைகுண்ட ஏகாதசியன்றும் விரதமிருத்தலும் விழாச்செய்தலும் உகந்தவை. இம்முறையில் முருகப் பெருமானுக்குக் கார்த்திகை, வைகாசி விசாகம் ஆகியனவும், விநாயகப் பெருமானுக்குச் சதுர்த்தி விழாவும் சிறப்புக்குரியவை.

இறைவனின் பல்வேறு திருமூர்த்தங்களுக்குச் செய்யப்படும் இத்திருவிழாக் களுக்குச் செய்யப்படும் இத்திருவிழாக்கள் மக்களின் நல்வாழ்வுப் பயன் நோக்கிச் செய்யப்படுபவை. இம்முறையில் சக்திக்கு உகந்த திருவிழாவாகக் கூறப்படுவது நவராத்திரி விழா.

நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் என்பது பொருள். மலைமகளாகிய துர்க்கை திருமகளாகிய லட்சுமி, கலைமகளாகிய சரஸ்வதி ஆகிய மூன்று தேவியர்களுமே இந்த நவராத்திரி விழாவின் வழிபாட்டுக்கு உரிய நாயகிகள். ஒவ்வொரு தேவிக்கும் மூன்று நாட்கள் மூன்று தேவிக்கும் ஒன்பது நாட்கள் இவ்விழா கொண்டாடப் பெறும். தேவியர்கள் ஒவ்வொருவருக்கும் சாத்துவிசம், இராஜசம், தாமசம் என்ற மூன்று குணங்களையும் உரியதாகக் கொண்டு முதல் மூன்று நாட்கள் லட்சுமிக்கும் இறுதி மூன்று நாட்கள் சரசுவதிக்கும் உரியனவாக இவ்விழா கொண்டாடப் பெறும்.

நவராத்திரியின் போது, இல்லங்களிலும் கோவில்களிலும் கொலுவைக்கப் பெறும். படிப்படியாகஏழு அல்லது ஒன்பது படிகள் வைத்து, ஒவ்வொரு படியிலும் உலகப் பொருட்கள் அனைத்துக்கும் உரிய மாதிரிகளாக மண்ணாலும் மரத்தாலும் செய்த பொருட்களை வைப்பர். சில இடங்களில் கொலு ஐந்து படிகளிலும் வைக்கப்பெறுதல் உண்டு.

ஐந்து படிகளாக இருபபின் அவற்றை பஞ்ச பூதங்கள் என்றும், ஏழு படிகளாக இருப்பின் எழுவகைப் பிறவிகள் என்றும் ஒன்பது படிகளாக இருப்பின் ஒன்பது இரவுகளையும் குறிப்பிடும் ஒனட்பது படிகள் என்றும் கூறப்படும். இவற்றுள் ஏழு படிகளில் கொலு அமைப்பதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மை. பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், தீ, வளி, வான் என்ற ஐந்தாலும் ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்துக்கும் சக்தியே பரம்பொருள் என்பதை ஐந்து படிகளில் அமைக் கப்பட்ட கொலு உணர்த்துகிறது. ஏழு வகைப் பிறவிகளிலும் உஉழலும் மக்களைக் காக்கும் பரம்பொருள் சக்தியே என்பதை ஏழு படிகளில் வைக்கப்பெறும் கொலு விளக்குகிறது. ஒன்பது வாயில் கொண்ட உடலைப் பெற்ற மனிதர்களுக்குச் சர்வ வியாபியாக மூன்று குணங்களாய் முத்தேவியராய் விளங்கும் பராசக்தியே உறுதுணையாக இருந்து சிறந்த நெறியைக் காட்டுவாள் என்பது ஒன்பது படிகளாக அமைக்கப்படும் கொலு விற்கு உரிய தத்துவம். இம்முறையில் உலகனைத்தையும் காக்கின்ற அரசன் ஒருவன், அமைச்சர், தானைத்தலைவர் மற்றும் மக்கள் கழுமிய அத்தாணி மண்டபத்தில் வீற்றிருந்து அரசாட்சி நிகழ்த்தும் அதுபோல உலகத்துக் கெல்லாம் "கொலுவிருத்தல்" என்று பெயர். அதுபோல உலகத்துக் கெல்லாம் பரம்பொருளாகத் தலைவி யாக விளங்கும் பராசக்தி இந்த உலகப் பொருட்கள் அனைத்தையும் தன் அருட்பார்வையால் ஆட்சி செய்து காக்கின்றாள் என்பது நவராத்திரிக்குக் கொலுவைப்பதன் தத்துவமாகும்.

மூன்று தேவியர்கள், மூன்று வகைக் குணங்கள் என்பதைக் காட்டும் வகையில் ஒன்பது இரவுகள் விழா காலத்தில் இது, கன்னிப் பெண்களுக்கு உரிய விழாவாகவும், குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, ரோகினி, காளி, சண்டிகா, சாம்பவி, துர்க்கை, சுபத்திரை என்ற நவதுர்க்கைகளாக, நவசக்திகளாக ஒன்பது கன்னிப் பெண்களை வைத்து ஒன்பது நாட்கள் நிகழ்த்தப்பெறும் விழாவாகவும் கூறப்பெறும்.

நவராத்திரி விழாவுக்கு வரும் மங்களப் பெண்டிர், கன்னிப் பெண்கள் ஆகியோர் முத்தேவியர் மீதும் தோத்திரப் பாமாலைகள் பாடுதல், ஒவ்வொரு நாளும் நைவேத்தியப் பொருட்களோடு தூபதீபம் காட்டி வணங்கிய பின்னர், அனைவருக்கும் வெற்றிலை, பாக்கு, பழம், பூ. குங்குமம், சந்தனம் முதலிய மங்களல் பொருட்களையும் நைவேத் தியம் செய்த பிரசாதங்களையும் தருதல் ஆகிய நிகழ்ச்சிகள் நவராத்திரி விழாவக்குரிய சிறப்பு நிகழ்ச்சிகள்.

உலக வாழ்வில் கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்று சிறப்புக்களையும் குறைவறப் பெறுதல் இவ்விழா நிகழ்த்தப் பெறும் நோக்கமாகும். முத்தேவியரும் பெண் தெய்வங்களாக இருத்தலால், இவ்விழாவில் மங்களப் பெண்களும், கன்னிப் பெண்களும் சிறப்பாகப் பங்குபெறுகின்றனர்.

——oOo——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்குக புகழ்

தென்குமரி முதல் அமெரிக்காவுடன்
நம் இலங்கை வரை
விண் முட்டும் வீர அறிவொளி முரசம்
விரைந்தறிவித்தான் வீரத்துறவி
விவேகானந்தன்!

புத்திரனோ இவன் சைவத்திற்கு
சித்தனோ அவன் அறிவு முழக்கத்திற்கு
தத்துவம் தந்திட்டான் இளம் சமூகத்திற்கு
வித்தகன் இவன் அன்றில்லா விட்டால்
குத்தகையாக கிளர்ந்திருப்பரோ - பலர்
மத மாற்றத்திற்க!

நித்தமும் சைவம் வளர்ந்திடவே- மதப்
பித்தர்கள் முடங்கினர் அதன் செழுமைகண்டு
புத்துயிர் பெற்று தழைத்தது சைவமன்று

இல்லறம் இல்லாமலே
நல்லறம் கண்டார் நம் துறவி
கள்ளரும் கண்ணீர் வடிக்கும்
நலலருந் தவங்களுரைத்து
தெள்ளிடும் சைவமதனை
சொல்லொடு சொல்ல முடியாதவாறு
சொல்லினான் அறம் சிறக்க

கங்கையில் மூழ்கியும் தீராபாவம்
நீங்குமே எம் துறவி நாமம் கேட்டு
பொங்குமா கடல் புரண்டெழுந்திடினும்
வேங்கையும் புல் தின்றிடுமா? - புவி
அங்குமே அழிந்திடினும்
மங்குமா சைவரின் பக்தி மணம்

சங்கமே முதலாணாலும் - முதலில்
துங்கனே வழிபாட்டுக்குரியன்
பங்கமே வந்தாலும் சைவத்தை
தங்கமே என காத்திடவே - உலகு
எங்குமே விழித்து விட்டனர்
சிங்கமே என இளைஞர் யுவதியர்
வங்கத்தின் புத்திரன் நரேந்திரன்
ஓங்குமா கடலென ஒலித்து - சைவம்
ஓங்கிட நாள் தூரமில்லை என
ஏங்கும் நெஞ்சங்களுக்கோர்
இன்பச் செய்தியிது
ஓங்குமே சைவப் புகழ் - என்றும்
தாங்குமே தர்மப் பெயர்.

தொகுப்பு:
செல்வி சுஜாதா செல்வராஜா
ஆசிரியை
மாணிக்கவாசகர் அ/பாடசாலை
மத்துகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்ட இந்து இளைஞர் மன்றத்தின் அருள்நெறி விழாவிற்கு

# எமது நல் வாழ்த்துக்கள்

## திருமதி R. இந்திரா

டெல்கித் குரூப்

கொம்வெல் பிரிவு

பதுரெலிய

அழிப்பது எல்லோராலும் முடியும். ஆனால் எத்தனை பேரால் ஆக்க முடியும்?

*- அன்னை ஸ்ரீ சாரதாதேவி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறை மாவட்டத்தின் இந்து சமய கலாசார செயற்பாடுகள் - ஒரு நோக்கு

~ ஆ. சுகேந்திரன்

தென்னிலங்கை வாயிலெனக் கருதப்படும் களுத்துறை மாவட்டத்தில் இம்மாதம் 29 ஆம் திகதி அருள்நெறி விழா, விழாக்கோலம் காணுவது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். களுத்துறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களின் இந்து சமய நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாகவும், சமய கலாசாரங்களில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் முகமாகவே இந்த அருள்நெறி விழாவினை இம்முறை களுத்துறையில் நடாத்த வேண்டுமென, களுத்துறை மாவட்ட அறநெறி பாடசாலைகள் இணைப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்க, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் களுத்துறையில் இவ்விழாவினை நடாத்த தீர்மானித்துள்ளது.

களுத்துறை இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் திணைக்கள பணிப்பாளர் திரு. எஸ். தில்லைநடராஜா தலைமையில் கோலாகலமாக மத்துகமை நகரசபை மண்டபத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கும் விழாவாக நடைபெறும். சமய நடவடிக்கைகளில் பின்தங்கி காணப்பட்ட களுத்துறை மாவட்டத்தில் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம், கடந்த ஆட்சியின்போது இந்து கலாசார இராஜாங்க அமைச்சராக இருந்த பி.பி. தேவராஜ் அவர்களிடம் இருந்தது. 1993 ஆம் ஆண்டு இந்து சமய நடவடிக்கையை களுத்துறையில் துரிதப்படுத்தியதன் பயனாக இன்று இவ்வாறான ஒரு விழாவினை தமிழ்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு விழாவாக நடைபெற உறுதுணையாக அமைந்திருக்கின்றது.

மேற்படி விழா தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் ஒன்று திணைக்கள பணிப்பாளர் திரு. எஸ். தில்லைநடராஜா தலைமையில் களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மேலும் சில கலந்துரையாடல்களும் மேற்படி ஆலயத்தில் நடைபெற்றது. இதற்கமைய இவ்விழாவில் மாணவர்களது கலைநிகழ்ச்சிகள், பக்தி இசைவிருந்து, விவாத அரங்கு, குழுநடனம், தனிநடனம், வயலின் இசை, பஜனை போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது.

இது இவ்வாறிருக்க 1993 ஆம் ஆண்டு ஆலயங்கள் தோறும் அறநெறி பாடசாலை என்ற திட்டத்தை அப்போது இருந்த அமைச்சர் பி.பி. தேவராஜ் அவர்களின் வழிக்காட்டலில் நடைபெற்றது. அதன்படி களுத்துறை மாவட்டத்திலும் அறநெறி பாடசாலைகள் இந்துசமய அமைப்புக்கள், ஆலயங்கள் என்பன இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு அதன் நடவடிக்கைகள் வலுப்பெற்றன.

இதனடிப்படையில் மத்துகம சென்மேரிஸ் மகாவித்தியாலயத்தில் விசேட நடமாடும் சேவை முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் அவர்களின் தலைமையில் அமைச்சின் செயலாளர் திரு. வாமதேவன் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா தகவல் அதிகாரி திரு. ம. சண்முகநாதன் கலாசார அதிகாரிகளான திரு. மாத்தளை வடிவேல், திருமதி இராஜேஸ்வரி, ஸ்ரீ காந்தா, மற்றும் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு அன்றைய தினமே அறநெறிப் பாடசாலைகள் பதிவு, இந்து ஆலயங்கள் இந்து மன்றங்கள் பதிவு செய்யப்பட்டு பதிவுச் சான்றிதழ்கள் அமைச்சர் அவர்களால் அவ்விடத்திலேயே வழங்கப்பட்டது.

அதன்பின்பு பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு உதவிப் பணிப்பாளர்களான திரு. வீ. விக்கிரமராஜா, திரு. எஸ். தெய்வநாயகம் அந்த மாவட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த கலாசார உத்தியோகத்தர் தோட்டம் தோட்டமாக சென்று அறநெறிப் பாடசாலைகளை இயக்குவது தொடர்பாக ஆலோசனை வழங்கியதுடன் மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், சமய நூல்கள், அறநெறிப் பாடசாலைகளுக்கான உசாத்துணை நூல்கள், மாணவர் வரவுப் பதிவேடு போன்றவை விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சிகளுக்கு அன்று தொட்டு இன்றுவரை கொழும்பு இராமகிருஸ்ணன் மிஷன் தலைவர் வணக்கத்துக்குரிய சுவாமி ஆத்மகனானந்த மஹராஜ் அவர்கள் ஆசியும், ஆலோசனையும் வழங்கி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இதன்படி ஆலயப் பதிவுகள் இன்று களுத்துறை மாவட்டத்தில், களுத்துறை தொடங்கொட பிரதேசங்களில் 6 அறநெறி பாடசாலைகளும் அகலவத்தை, மத்துகமை பிதேசங்களில் 20 அறநெறிப் பாடசாலைகளும், ஹொரணை, இங்கிரிய பிரதேசங்களில் 8 அறநெறி பாடசாலைகளும் மொத்தம் 34 அறநெறி பாடசாலைகள் பதியப்பட்டுள்ளன. அதேபோல் இந்து சமய அமைப்புக்கள், களுத்துறை, தொடங்கொட பகுதிகளில் 5 அமைப்புக்களும், மத்துகமை, அகலவத்தை பகுதிகளில் 7 அமைப்புக்களுமாக மொத்தம் 16 இந்துசமய அமைப்புக்கள் இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதே போன்று இந்து ஆலயங்களில் ஹொரணை, புளத்சிங்கள பகுதிகளில் 11 இந்து ஆலயங்களும், மத்துகமை, அகலவத்தை பகுதிகளில் 26 இந்து ஆலயங்களும், களுத்துறை, தொடங்கொட, பாணந்துறை, வாதுவைப் பகுதிகளில் 18 இந்து ஆலயங்களும் மொத்தமாக 55 இந்து ஆலயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**அறநெறிக் கல்வி மகாநாடு**

1993 ஆம் ஆண்டு சமய நடவடிக்கைகள் துரிதமாக வளர்ச்சியடைந்து வந்ததன் பயனாக களுத்துறை மாவட்டத்திலும் ஒரு சமய விழாவொன்றினை நடாத்த வேண்டும் என களுத்துறை மாவட்ட அறநெறி பாடசாலைகள் இணைப்பாளர். திரு. எஸ். ரி. சதாசிவம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்துசமய கலாச்சார இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் களுத்துறை மாவட்டத்தில் இந்து அறநெறிக் கல்வி மகாநாடு 1994 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22ஆம் திகதி நேபொட குலோடன் தமிழ் வித்தியாலயத்தில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களின் ஒழுங்கமைப்பில் சிறப்பாக நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வைபவத்திற்கு அமைச்சர் திரு. பி.பி. தேவராஜ், வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஸன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்ம மகனானந்த ஜீ, தமிழகத்தில் இருந்து வருகை தந்த சொற்பொழிவாளர் கவிஞர் இந்திரஜித் ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் திணைக்கள அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவின் போது சங்கீத பூசணம் திரு. கணேஷலிங்கம் தலைமையில் தமிழில் மந்திரம் ஓதல், திருமதி சுலோச்சனா பாலசுப்ரமணியம் குழுவினரின் பக்தி இசைவிருந்து, இராமகிருஷ்ணமிஷன் ஞாயிறு பாடசாலை மாணவர்களின் வில்லிசை, குலோடன்,

அரப்பலாகந்த தமிழ்வித்தியாலய மாணவிகளின் கும்மி நடனம், பண்ணிசைப் பாவலர் பி.வி. ராமன் அவர்களின் தமிலோடு இசைபாடல் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இறுதியாக களுத்துறைப் பிரதேச தோட்ட ஆலயங்களில் தேசிகர்களாக கடமை புரியும் இருபது அர்ச்சகர்களுக்கு இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜும், சுவாமி ஆத்மகனானந்தஜீ அவர்களும் பொன்னாடை போர்த்தி தேசிகர்களது ஆலய பணிகளை பாராட்டினர்.

மேற்படி இம்மாநாட்டு நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்பிரிவ கட்டுப்பாட்டாளர் திரு. வி. என். மதியழகன் தொகுத்ததுடன். நன்றியுரையை ஹொரணை பிரதேச சபை உறுப்பினர் திரு. எம். சிவகணேசமூர்த்தி நிகழ்த்தினார்.

## கௌரவிப்பு

இதே வேளை இன்று நடைபெறும் அருள்நெறி விழாவிலும், களுத்துறை மாவட்டத்தில் ஆலயத்தொண்டுகள் மற்றும் சமய வளர்ச்சிக்கும், சமூகத்துக்கும் முன்னின்று உழைத்தவர்களின் நற்பணிகளைப் பாராட்டி இம்மாவட்டத்தில் உள்ள 5 சமயத் தொண்டர்களுக்கு பொன்னாடை போர்த்தி, சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட விருக்கின்றனர். களுத்துறை மாவட்டததில் நடைபெறும் விஷேட விழாக்களின் போது இந்த மாவட்டத்தில் உள்ளவர்கள் பாராட்டப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

## இந்து சமய போட்டிகள்

இந்த விழாவிலும், இந்து சமய கலாச்சார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அறநெறி பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியில் பேச்சு, கட்டுரை, பண்ணிசை, திருக்குறள் மனனம், மாலைக்கட்டுதல், ஆன்மீக உடை போட்டி ஆகிய துறைகளில்போட்டிகள் மத்துகம சென்மேரீஸ் மகாவித்தியாலயத்தில் கடந்த ஆகஸ்ட் 22 ஆம் திகதி நடைபெற்றது. இப்போட்டிகளின் மூலம் மாணவர்கள் மத்தியில் இந்து சமய அறிவை வளர்த்தல், சமய உணர்வை ஏற்படுத்துதலும், மாணவர்களின் எழுத்துத் திறன், பாடும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகவமே நடத்தப்பட்டது.

## கருத்தரங்கு

மேலும் இம்மாவட்டத்தில் இந்து சமய வளர்ச்சிஆரம்பமான 1993 ஆம் அண்டு காலப்பகதியிலிருந்து இன்றுவரை அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு 10க்கு மேற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் பயிற்சி கருத்தரங்குகளும், 5 மூன்றுநாள் பயிற்சி கருத்தரங்குகளும் நடைபெற்றுள்ளன. இக்கருத்தரங்குகளில் களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்கள, மத்துகம, ஹொரனை, அகலவத்தை, நேபொட போன்ற பகுதிகளிலிருந்து ஆசிரியர்கள் கலந்து கொண்டு தமது அறநெறி பாடசாலைகளின் கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் இந்துசமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களம் களுத்துறை மாவட்டத்தில் இந்துசமய நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்பு களுத்துறை மாவட்டத்தில் நடைபெற்ற இந்துசமய கருத்தரங்குகள், விழாக்கள் என்பவற்றின்போது இந்தியாவிலிருந்து வருகைதந்திருந்த கவிஞர்கள் சிலரும் களுத்துறை மாவட்டத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

## தமிழக அறிஞர்கள் சுவாமிகளின் வருகை.

1993 ஆம் ஆண்டு களுத்துறை மாவட்டத்திலுள்ள மத்துகமை சென்மேரிஸ் மகாவிததியாலயததில் நடைபெற்ற முத்தமிழ் விழாவின் போது தமிழகத்தில் இருந்து வந்த சுவாமி இராமசாமி அடிகள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். அதன்பின்பு 1994ஆம் ஆண்டு களுத்துறை மாவட்டத்தில் இரண்டாவது இந்து அறநெறி கல்வி மாநாடு நேபொட குலோடன் தமிழ் விததியாலயத்தில் நடைபெற்ற போது தமிழகத்தில் இருந்து வந்த கவிஞர் இந்திரஜித் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்.

அதன்பின்பு இந்து அறநெறிக் கல்வி மாநாட்டை முன்னிட்டு அதே வருட ஆரம்பத்தில் புளத்சிங்கள பகுதியில் இந்துசமய போட்டிகள் நடைபெற்ற வேளை தமிழகத்திலிருந்து வருகை தந்த திருமதி குன்னக்குடி பாலா அவர்கள் புளத்சிங்கள தமிழ்விததியாலயத்தில் சிறந்த பக்தி இசை விருந்து ஒன்றை நடத்தினார். இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வந்திருந்த கலைஞர் மாதவன் அவர்களின் இசைக்குழுவினர், களுத்துறைக்கு அழைத்து வரப்பட்டு நோபொட விஸ்கிலன் தோட்ட திருவிழாவின் போது பக்தி இசை நிகழ்ச்சி ஒன்றை நடாத்தினார்கள்.

இவை மட்டுமன்றி 1997 ஆம் ஆண்டு கன்னியாக்குமரி விவேகானந்த கேந்திர நிலைய செயலாளர் திரு. கிருஷ்ணமூர்ததி அவர்கள் களுத்துறை இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற களுத்துறை இந்து இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவ பயிற்சிப் பட்டறையை நடத்தியதுடன் பஜனை கூட்டுப்பிரார்த்தனை நிகழ்ச்சிகளை பயிற்றுவித்து இளைஞர்களை சமய செயற்பாடுகளில் ஈடுபடுத்த வைத்தது குறிப்பிடத்தக்கது. பின்னர் மீண்டும் 1998ம் ஆண்டு நவராத்திரி விழாவின்போது இலங்கை விஜயம் மேற்கொண்டதுடன் களுத்துறை மாவட்டத்தில் மூன்று நாட்கள் பல்வேறு தோட்டங்களுக்கு விஜயம் செய்து சமய கருத்துக்களை வழங்கினார். இவ்விஜயத்தின் போது குலோடன் தமிழ் வித்தியாலயத்தின் இந்து மாணவர் மன்றம் வெளியிட்ட கலையமுதம் நூல் வெளியிட்டு வைத்ததும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக 1999 ஆம் ஆண்டும் களுத்துறை மாவட்ட செயற்பாடு நின்று விடவில்லை. மத்துகம சென் ஜோர்ஜ் தமிழ்வித்தியாலயத்தில், களுத்துறை மாவட்ட அறநெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு நடைபெற்ற ஒரு நாள் இந்துசமயக் கருத்தரங்கின்போது, தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த திரு. கே. வி. சிவசாமி அவர்கள், ஆசிரியர்களுக்கு யோகாசனப் பயிற்சி பெறுவது எவ்வாறு என்பது பற்றி விளக்கினார்.

**பூசகர் பயிற்சி**

அத்துடன் தோட்ட அடித்தள கட்டமைப்பு அமைச்சு, இந்துசமய பண்பாட்டலுவல்கள், திணைக்களமும் இலங்கை இந்து பேரவை ஆகியன இணைந்து மலையக ஆலயங்களில் பூசகர்களாக கடமை புரிவோருக்கு வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்குகளை பண்டாரவளையிலும், கொழும்பிலும் நடததியது. இக்கருத்தரங்கு கடந்த மே மாதம் 26ஆம் திகதி முதல் ஜ"ன் மாதம் 4ஆம் திகதிவரை கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்றது.

இப் பயிற்சிக் கருத்தரங்கிற்கு களுத்துறை மாவட்டத்தில் இருந்தும் 10 பேர் கலந்து கொண்டனர். இவர்களுக்கு பயிற்சி வழங்கவென தமிழக கிராமக் கோயில்களின் பூசாரிகள் பேரவைகளின் உறுப்பினர்கள் இவர்களுக்கு பயிற்சிகளை வழங்கினர்.

மேற்படி பயிற்சியின் போது ஆலய பூசகர்களுக்குரிய பிரதான கடமைகள், அவற்றை ஆற்ற வேண்டிய முறைகள், மிக எளிய மந்திரங்கள், தேவாரம், பஜனைப் பாடல்கள் போன்றவை பயிற்றுவிக்கப்பட்டன. அத்துடன் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த விரிவுரையாளர்களில் திரு. கோதண்ட இராமன் அவர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றி பூசாரிகளுக்கு உரிய மந்திரங்களை ஓதி பூனூலும் அணிவித்தனர்.

இவ்வாறாக களுத்துறை மாவட்டத்தில் இந்து சமய வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவர்களையும், இந்த சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தையும் கலாசார உத்தியோகத்தர் திருமதி நிர்மலா கருணானந்தராஜாவையும் பாராட்ட வேண்டும்.

ஆகவே பல வழிகளிலும் பின்தங்கியிருந்த இந்த மாவட்டத்தில் மென்மேலும் இதுபோன்ற இந்துசமய செயற்பாடுகள் நடைபெற்று களுத்துறை வாழ் இந்துக்களின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி இளம் சிறார்கள் மற்றும் பெரியோர்கள் மத்தியில் சமய பற்றினையும் சமய நம்பிக்கையினையும் ஏற்படுத்த இந்துக்களாகிய நாம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

இது இவ்வாறிருக்க இன்று நடைபெறும் இவ்விழாவில் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சுவாமி சித்பவானந்த ஆசிரம தலைவர், ஸ்தாபகர் சுவாமி ஓங்காரனந்தா அவர்களும் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி வணக்கத்திற்குரிய தத்பாசானந்த ஜி மஹராஜ் அவர்களின் சிறப்பு சொற்பொழிவும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

களுத்துறை இந்து இளைஞர் மன்றம் இந்து சமய பண்பாட்டலுவர்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த விழாவின் மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி விழாவிற்கு
எனது வாழ்த்துக்கள்

# M. K. MUTHTHU

Kishor Kumar

Buyer and Seller of Machineries

Tel : 034 61522
Sun: 074 286041

42, Ariyavilasha Road,
Horana.

கடவுளைச் சரணடைத்தவன் தான் காப்பாற்றப்படுவான்.
- அன்னை ஸ்ரீ சாரதாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறமும் அருளும்

~ பா. வயிரவநாதன் ~ இந்து கலாசாரத் திணைக்களம் ~

அறமும், அருளும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை யாகும். அறத்தினூடே அருளும், அருளின் வெளிப்பாடாக அறமும் அகத்துள்ளே பொங்கிப் பிரவாகிக் கின்றது. சிந்தனை தூய்மையா னால் அறம் செய்யும் இயல்பு தானாகவே பிறந்துவிடுகின்றது. அருள் உணர்வு இன்றேல், அறம் செய்யும் உணர்வு வான் உருவா குமா? பொருளும், போகமும் மட்டும் வாழ்வாகாது. ஆனால் இவை உலகியல் வாழ்விற்குத் தேவையான ஒன்றேயாகும். இந்தப் பொன், பொருள், பூமி போன்ற அனைத்துச் செல்வங்களுமே சகலரையுமே போய்ச் சேர வேண்டுமென நாம் நினைத்துப் பார்க்கின்றோமா? இல்லையே.

அனைத்து வளங்களுமே எம்மையே சாரவேண்டும் என நினைத்துத் தானே இறைவனை அனுதினமும் வேண்டித் தொழுகின் றோம். இவை எல்லாமே அனைத் தும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என எண்ணும் பரந்த இயல்பு எல்லோருக்குமே இருக்க வேண்டுமன்றோ? பற்றற்ற ஞானிகள் தமக்காக வாழ்ந்ததரில்லை. உலகம் உய்வதற்காகவே வாழ்ந் தார்கள். அவர்கள் எமக்காக வேண்டி, அழுததும், ஒரு அறநெறியன்றி பிறிதில்லை.

பெரும் பொருள் கொடுப்பது மட்டும் கொடையன்று. இயல் பாகவே சுரக்கின்ற அன்பினை ஈந்து வருவதும், ஒரு பெரும், அருங்கொடையேயாகும். போட்டி பூசல்கள் கொண்ட இந்த உலகில் ஒருவருக்காம், இன்னும் ஒருவர் தியாகம் புரிவது என்பதே அருகிவிட்டதெனலாம். வையத்து வாழ்வாங்கு வாழ்தல் என்பது அருகோடி உணர்ந்த அறவாழ்வே யாகும்.

அகழ்ந்தாரைத் தாங்கும் நிலம் போல் என்றார் வள்ளுவர். தியாகம் என்பது தனது இன்பத்தி னைத் துறந்து, பிறர்க்கு இன்பம் அளிப்பதேயாகும். இத்தகைய பண்பு சகல உலகினரிடையேயும் போய் சேரல் வேண்டும். இறைபக்தி, குருபக்தி, சான்றோரைப் பணிதல் ஈன்றோரைப் பேணல் போன்ற இன்னோரன்ன நற்பண்புகளை நாம் கைக்கொண்டால் மட்டுமே நாம், மானுடராய் பிறந்த பேற்றினைப் பெற்றவராவோம். தவிர எப்படியும் வாழலாம் என்கின்ற மாய உள்ளங் களை மனத்துள் வளர்த்துக் கொண்டு போலியாக எம்மைச் சுற்றி நாமே வலைபின்னிச் சீரழிவதும் ஒரு வாழ்வாகுமோ?

நல்லதையே என்றும் எண்ணல் வேண்டும். "தீதும் நன்றும் பிறர்தரவாரா" நம் எண்ணங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியேதான் நம் உயர்வும் தாழ்வும் உண்டு. எனவே நாம் எமது சிந்தனைச் செதுக்க வேண்டும்.

உள்ளுவது எல்லாம் உயர்வு
உள்ளல் மறந்து
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.
என்றார் பொய்யாமொழி

உயர்ந்த எண்ணங்கள் ஒருவானை உயர்த்தும் இழிந்த எண்ணங்கள் ஒருவனைத் தாழ்த்தும். எனவே நினைப்பதை உயர்வாக, மாசு அற நினையுங்கள் நல்லதை நினைப்பதால் என்ன கஷ்டம் வந்துவிடப் போகின்றது. மனதினைப் பக்குவப்படுத்தினால் தான் இறைவன் அதனுள் புகுந்து கொள்வான். அசுத்தமான வீட்டிற்குள் புகுவதற்கு, அசூசைப்படும் நாம், எமது மனதை மட்டும் அசுத்தப்படுத்தினால், எப்படி அதனுள் தெய்வம் உறைந்து கொள்ளப் பிரியப்படும்?

எனவே அன்போடு உள்ளத்தினைச் செம்மைப்படுத்தி, அறவாழ்வு வாழ்ந்தால், பெறுதற்கரிய இறை அருள் தானாகவே எம்மை இறுகப் பற்றும்.

அறமும் அருளும் பெருக
இறையினுள், உளத்தைச் செலுத்தி
குறைஇல் பண்பை வளர்த்து
நிறைவாய் அருளைப் பெறுவோம்.

---

**கடவுளைக் காணலாம்**

உருவக் கடவுள் அருவக் கடவுள் இரண்டையும் காணலாம். உருவக் கடவுளை உணர்வோடு கூடிய சின்மயமாக காணலாம். மனித வடிவிலும் இறைவனைக் காணலாம். எப்படியெனில் அவதார புரஷரை காண்பது ஆண்டவனையே காண்பதாகும். ஒவ்வொரு யுகத்திலும் இந்த உலகில் கடவுள் மனித வடிவில் தோன்றுகிறார்.

~ ஸ்ரீராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய தெய்வ வழிபாட்டு முறையும் தோட்டப்பகுதி இளந்தலைமுறையினரும்

~ மாத்தளை பெ. வடிவேலன் பி.ஏ.

இன்று மலையகத்தில் விளங்கும் இந்து ஆலயங்களில் அதிகமானவை, இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக மலையகத்தில் குடியேறிய பின்னர் அமைத்தவைகளேயாகும். இவற்றில் பெரும்பாலானவை இன்றளவும் ஐதீக முறையில் விளங்குவது கண்கூடு. ஒரு சில தோட்டப் பகுதிகளிலும் தோட்டங்களை அண்மித்த சிறிய பட்டினங்களிலும் நகரங்களிலும் ஆகம விதிமுறையிலான சைவ ஆலயங்கள் பெரும் முயற்சியினால் நிர்மாணிக்கப்பட்டு நித்திய நைமிதிய பூசைகள் சிறப்பாக நடைபெறுவது மகிழ்ச்சியுடன் குறிப்பிடத்தக்கது.

எனினும் மலையகத்தில் குறிப்பாக தோட்டப் பகுதிகளில் நீண்ட பாரம்பரியத்தை உள்ளடக்கிய கிராமிய தெய்வ வழிபாட்டு நெறி நிலைபெற்றுள்ளமை நோக்கத்தக்கது. இக்கிராமிய தெய்வ வழிபாட்டு முறை மலையக மக்களின் பூர்வீக இந்திய கிராமிய மரபினையே பெரிதும் அடியொற்றிக் காணப்படுகின்றது. இக்கிராமியத் தெய்வ வழிபாட்டு நெறியின் வேர்கள் ஆழமான, உறுதியான பற்றினாலும் பக்தியினாலும் நம்பிக்கையினாலும் முகிழ்ந்தவைகளாகும்.

ஒரு காலத்தில் கிராமிய தெய்வ வழிபாட்டு நெறியில் சிறப்புற்று விளங்கிய மாரியம்மன், காளியம்மன் வழிபாடு என்பன இன்று ஆகம, திருக்கோயில் வழிபாட்டு நெறியாக மலையகத்தில் சிறந்து விளங்குகின்றது. அத்துடன் தொழில் ரீதியான கிராமிய தெய்வ வழிபாட்டு நெறிக்குள் அடங்கும் "கவாத்துசாமி, ரோதைமுனி, சிந்தாகட்டி, வால்முனி, சங்கிலிகறுப்பன், மாடசாமி, வெள்ளாவிசாமி, இடும்பன், முனியாண்டி, கறுப்பண்ணன் வழிபாடு, மருதைவீரன் வழிபாடு என்பன குறிப்பிடத்தக்க அளவில் நிலைபெற்றுள்ளன.

கிராமிய தெய்வ வழிபாட்டு முறையில் பல சிறப்பம்சங்கள் உள்ளன. பக்தர் தாமே ஆட்பட்டு வழிபடுவதும் தன்னை நேரிடையாக இணைத்துக் கொள்வதும் இதில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இக்கிராமிய தெய்வ வழிபாட்டு நெறியில் காலத்திற்கேற்ப பல மாற்றங்களை செய்வது உகந்தது. இவ்வாறு மாற்றங்களை புகுத்துமிடத்து பக்தியின் அடி நாதமான பாரம்பரியமிக்க கலாநயமிக்க அம்சங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணித்துவிடலாகாது. தோட்டத்து கோவில்களில் இடும்பன் பூசை நடைபெறும் போதும் கவாத்துசாமி, மாடசாமி, ரோதைமுனி என்பன கும்பிடும்போதும் இன்றும் பல தோட்டங்களில் கோழி ஆடு முதலானவற்றை பலியிடுவதைக் காண்கின்றோம். அத்துடன் மதுவும் படைக்கப்படுகின்றது. இவைகளை தவிர்க்கலாம். உயிர்ப்பலிக்காக சாம்பல் பூசனிக்காயை வெட்டலாம்.

இடும்பன் ஒரு காவல் தெய்வமாக கணிக்கப்படுகின்றார். அநேகமாக வள்ளி தெய்வானை சமேத திருக்கோயில்கள் அல்லாத பால முருகன் திருக்கோயில்களில் இடும்பனை அமைத்துள்ளார்கள். இலங்கையில் நாட்டுக் கோட்டை, தேவ கோட்டை செட்டியார்கள் அமைத்து திருப்பணி ஆற்றிய திருக்கோயில்களில் இவ்வமைப்பினை காணலாம். இடும்பனுக்கும், பைரவருக்கும் உயிர் பலியிடும் வழக்கம் மலையக தோட்டப் பகுதிகளில் காணப்படுகின்றது. இதனைத் தவிர்த்து அர்ச்சகர்கள் சுக்கு, எலுமிச்சம் என்பனவற்றினால் தயாரித்த பானகம், வடை மாலை என்பனவற்றை மடையில் படைத்து வழிபாடு செய்யலாம்.

களுத்துறை மாவட்டத்திலுள்ள அகலவத்தை முகமதி தோட்டத்தில் அம்பிகைக்கு கரகம் பாலித்து திருவிழா நடத்தியபின்னர் அடுத்தநாள் பல ஆடுகளை பலியிட்டு மகிழ்கின்றனர். இன்று ஆகம நெறிமுறையில் மூர்த்தி, தலம், தீர்த்தம், திருவிழா, இரதோற்சவம் என சிறந்து விளங்கும் அம்பிகை வழிபாட்டிலிருந்து இவ் அம்சங்களை தவிர்க்க இளைய தலைமுறையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். திருவிழா முடிந்த பின்னர் ஏழுதினங்கள் அல்லது ஒன்பது தினங்கள் ஆலயத்தை மூடி கதவடைத்து பூசை செய்யாமல் விடுவதில் எதுவித அர்த்தமும் இல்லை.

தோட்டப்பகுதி திருவிழாக்களின் போது என்றும் இல்லாத அளவு இன்று மதுபாவனை குறிப்பாக கசிப்பு பாவனை அதிகரித்துள்ளது. இளைஞர்கள் இதில் அதிக கவனமெடுத்து இவற்றினை தடுக்கவேண்டும். "பஜனை" "கூட்டுப்பிரார்த்தனை" ஆகிய நிகழ்ச்சிகளை நடாத்தவேண்டும். திரு. எஸ். ரி. சதாசிவம் அவர்கள் கொழும்பு இராமகிருஷ்ண ஆச்சிரம சுவாமி ஆத்மகனானந்த மகராஜ் அவர்களோடு தொடர்பு கொண்டு தோட்டப் பகுதிகளில் பஜனையினை அறிமுகப்படுத்தி ஏற்பாடு செய்து வருவது வரவேற்கத்தக்கது. அண்மையில் காலி மாநகர் ஆடிவேல் விழாவில் களுத்துறை மாவட்ட அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் பஜனை நடாத்தியது சிறப்பாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய தெய்வ வழிபாட்டு நெறியில் வழக்கிலுள்ள காலத்திற்கு ஒவ்வாத கிரியைகளை புறக்கணித்துவிட்டு முப்பொருள் உண்மையை எடுத்துக் காட்டும் ஆன்மிக வழியில் நடப்பது சிறந்தது.

விரதங்கள் மகிமை உடையவை. விரதங்களின் பெருமைகளை எடுத்து விளக்கி விரதங்களை அனுஷ்டிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லா விரதங்களையும் அனுஷ்டிக்க முடியாதவர்களை முக்கிய விரதங்களையேனும் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பிதிர்தர்ப்பணமான தந்தையாருக்காக மகன் நோற்கும் ஆடி அமாவாசை தாய்க்காக மகள் நோற்கும் ஆவணி பௌர்ணமி ஆகியவற்றுடன், சோமவாரம், ஆடிப்பூரம் கிருஷ்ண ஜயந்தி, வரலஷ்மி விரதம், நவராத்திரி, கௌரி விரதம் என்பனவற்றை யெல்லாம் விளக்கி நோற்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தோட்டங்களில் குருபூசை, தீபபூஜை திருவிளக்கு பூஜை என்பனவற்றை நடாத்த வேண்டும். மார்கழியில் இன்று தோட்டப் பகுதிகளில் இராமர் பஜனை நடைபெறுகின்றது. இந்த வகையான மரபு வரவேற்கத்தக்கது. இவற்றுடன் மார்கழி பிறந்தவுடன் திருப்பள்ளியெழுச்சியினை முப்பது நாள்களும் படித்து பின்னர் கடைசி பத்து நாள்களும் திருவெம்பாவை பாட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

மலையகத்தில் குறிப்பாக தோட்டப் பகுதிகளில் பண்ணிசையை வளர்ப்பது மிக மிக முக்கியம். சில பகுதிகளில் சிவராத்திரி தினங்களில் சினமாமெட்டில் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியாக தேவார திருவாசக திருப்பதிகங்கள் பாடப்படுகின்றன. இவற்றை தவிர்த்து உரிய பண்ணில் திருமுறைகளை பாடல் வேண்டும்.

இவற்றிக்கெல்லாம் சமகாலத்தில் இளைஞர்கள் சமூக உணர்வுடன் செயலாற்ற முன்வரல் வேண்டும். தோட்டப் பகுதிகளில் தமிழ் இலக்கியம், சமயம் ஆகிய துறைகளில் மன்றங்களை அமைத்து பணிபுரிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்ட அருள்நெறி விழா சிறப்புற

## எமது நல் வாழ்த்துக்கள்

# K. JEYARAMAN

**AGALAWATTA GRINDING MILLS**

**No. 8, OLD ROAD,**
**AGALAWATTA.**

*மேகத்தைக் காற்று கலைப்பதைப் போல ஆண்டவன் நாமம் உலகப் பற்றாகிய மேகத்தைக் கலைத்து விடும்.*

*- அன்னை ஸ்ரீ சரதாதேவி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து இந்துமதமும் இதிகாசங்களும்

~ தொகுப்பு: செல்வி கிட்ணசாமி சுமதி

சனாதன தர்மம் என்றும், வைதீக மதம் என்றும் சிறப்புப் பெறும் இந்து மதம் தோன்றிய காலத்தையோ தோற்றுவித்தவரையோ, தோன்றிய இடத்தையோ வரையறுத்துக் கூறமுடியாதளவுக்கு சிறப்புக்குரிய ஒரு மதமாக கொள்ளப்படுகின்றது. இருப்பினும் இந்துமதம் இந்தியாவிற்கே உரியது என்றும் வேதங்களை அடிப்படையாகக் கொண்டது என்றும் கருத்துக் கொள்ளப்படுகிறது.

இந்து மதம் பற்றிய புராதன நிகழ்வுகள் இந்திய வரலாற்றில் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பதை சிந்துவெளி அகழ்வாராய்சிகள் எடுத்துக் கூறின. இந்தியாவிற்கே சிறப்புக்குரியதான இந்துமதத்தினை ஈழம் எப்பொழுது ஏற்றுக் கொண்டது? இதன் காலம் யாது? என்பவற்றையும் ஈழத்தின் புராதனம் பற்றி அறிவதற்கும் இதிகாசங்கள் உதவியளிக்கின்றது.

இராமாயணம் ஈழத்தின் புராதன இந்துமத வரலாற்றை அறிய உதவியுள்ளதைக் காண்கின்றேம். பல இடங்களிலே இந்துமதம் ஈழத்தில் பெற்றிருந்த சிறப்பு நிலையை அறியவும் இந்த இராமாயணம் உதவியுள்ளது. இராமாயண சம்பவத்திலே ஈழம் பற்றியதான கருத்துக்கள் நிறைவாக காணப்படுவதற்குக் காரணம் இராமனை இந்திய மன்னனாகவும் இராவணனை ஈழத்து மன்னனாகவும் குறிப்பிட்டு உள்ளதே. ஈழத்து அரசனாக விளங்கிய இராவணனின் இயல்புகளை இராமாயணம் தந்திருக்கும் இடங்களை உற்று நோக்ககுகின்ற போதும் குறிப்பிடும் போதும் இராவணன் சிறந்த சிவ பக்தனாகக் காட்டியிருப்பதை காண்கிறோம். இவனது பலம் இவனது தவத்தினால் கிடைத்தது என்பது இராவணனால் பல இடங்களிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவன் சிவனை எண்ணி சிவன் புகழ் பாட பலமிக்க வரத்தை பெற்றிருந்தான் என்பதோடு சிறிய இலிங்கத்தை தன் அங்கத்தில் அணிந்து கொள்ளும் வழக்கமும் உடையவனாய் கூறப்பட்டுள்ளது. இவனது பலத்தினால் இவன் கயிலை மலையை பெயர்த்த சம்பவமும் மனங்கொள்ளப்படத் தக்கது. இவன் தன் அன்னையின் அந்திமக் கிரியைகளை ஆற்றுவதற்காக கன்னியாய் வெந்நீர் ஊற்றினை வெட்டிய சம்பவமும் இராமாயணம் வழியாக அறியக் கூடியதாக உள்ளது. இந்த வகையில் சிவனோடும் சிவவழிபாட்டோடும் தொடர்புபெறும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாபாத்திரமாகவே இராவணனை இராமாயணம் குறிப்பிடுகின்றது. ஆதலால் அவன் வாழ்ந்த காலத்திலே அவனும் அவனைச் சார்ந்துள்ள குடிகளும் சைவத்தைப் பேணி, சைவப் பற்றுடையவர்களாக விளங்கினர் என்பதை ஏற்றுக்கொள்ள முடிகிறது.

இராமாயணம் இராவணனை தொடர்புபடுத்தும் முகமாக இராமனது மனைவியை இராவணன் கவர்ந்து வந்து ஈழத்திலே சிறைப்படுத்தி இருந்தமையையும் அவளை மீட்பதற்காக இராமன் ஈழத்திற்கு வந்து இராவணனோடு யுத்தம் புரிந்தமையும், இந்த யுத்தத்திலே இராவணன் மாண்டு போனதையும் இராமன் இராவணனை கொலை செய்த பாவத்தை போக்கிக் கொள்வதற்காக ஈழத்திருத்தலங்களிலே முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய இரண்டு ஆலயங்களுக்கும் பொன்னாலும் வெள்ளியாலும் ஆகிய இலிங்கங்களை ஸ்தாபித்து மீண்ட சம்பவங்களையும் இராமாயணமே உறுதி செய்துள்ளது. இதனால் இராவணன் ஆட்சியில் ஈழத்திலே திருக்கேதீஸ்வரம் முன்னேஸ்வரம் போன்ற திருத்தலங்கள் சிறப்புடன் பூசிக்கப்பட்டிருந்தன என்பதையும் ஏற்றுக்கொள்ள முடிகிறது.

இந்த வகையில் இராமாயண சம்பவம் நடைபெற்ற காலத்தில் ஈழத்திலே சைவ வழிபாடு வளம் பெற்றிருந்த ஒரு காலம் என்பதனை இராமாயண இலக்கியம் மூலம் உணர்த்தப்படுகிறது. உபநிடத எழுச்சிக்குப் பின்னர் புராணங்கள் எழுந்த சமகாலத்திலே வான்மீகி தந்த இராமாயண கருத்துக்களை முன் வைத்திருப்பினும் சம்பவம் நடந்த காலத்தை அது குறிப்பிடத் தவறிவிட்டது. எனவே வரையறை கூறமுடியாத காலத்தில் ஈழத்திலே சைவம் சிறப்புற்றிருந்தது என்று இராமாயண இதிகாசம் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

இராமாயண சம்பவத்தை மட்டுமன்றி பாரதத்திலும் சில குறிப்புக்கள் ஈழத்தின் இந்துமதம் பற்றிக் காணப்படுகின்றது. இக்குறிப்பிலே அருச்சுணன் தல யாத்திரை பற்றியதான குறிப்பு ஒன்று காணப்படுகின்றது. வட இந்திய நாட்டிலிருந்து தென்னாட்டிற்கு தல யாத்திரை செல்லப் புறப்பட்ட அருச்சுணன் தென்னாட்டு திருத்தலங்களை தரிசித்து மீளுகையில் ஈழத்து திருக்கேதீச்சரத்தையும் தரிசித்ததோடு ஈழத்தின் நாக கன்னிகையையும் திருமணம் செய்து கொண்டு சென்றதாக தரப்பட்ட குறிப்புக்களின் அடிப்படையில் இராமாயண சம்பவ காலத்தில் மட்டுமல்லாது பாரத சம்பவம் நடந்த காலத்திலும் ஈழத்தில் சைவத்திருத்தலங்கள் இருந்தன என்றும் இந்துமதம் வளமிக்கதாக காணப்பட்டது என்றும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. ஐதீக கதைகள் தரும் ஆதாரங்களின் படி ஈழத்திலே வரையறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறமுடியாத காலந் தொட்டே இந்து சமய வழிபாட்டு நெறிகள் தழுவப்பட்டு வந்துள்ளதென கொள்ள முடிகிறது.

ஈழத்து இந்துமதம் பற்றி அறிவதற்கு ஆதி புராதன கால வரலாற்று நிகழ்வை எடுத்தியம்பும் வரலாற்று இலக்கியங்கள் என்ற வகையில் மகாவம்சம் பெரிதும் பங்களிப்பு ஆற்றியுள்ளது. இந்த மகாவம்சம் தந்துள்ள குறிப்பின்படி ஈழத்துப் பூர்வீகக் குடிகள் இந்துக்களாகவே விளங்கினர் என்பதை ஆதாரப்படுத்தக்கூடிய செய்திகளை வழங்கியுள்ளது. அதாவது ஈழத்து பூர்வீகக் குடிகள் கிரேக்கர், நாகர், வேடர் என்றும் அவர்களது பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும் கூறப்பட்டிருக்கும் இடத்திலே அவர்களது வழிபாடுகளிலே இலிங்க வழிபாடு, நாக வழிபாடு என்பவற்றை கொண்டவர்களாகக் குறிப்பிடப்படுகின்றது. அவர்கள் மேற்கொண்ட வழிபாடுகள் இந்து மதத்துக்குரியனவாகக் காணப்படுவதால் ஈழத்து பூர்வீகக் குடிகள் இந்து மக்கள் என்பதை மகாவம்சம் விளக்குகின்றது.

இதனை ஆதாரப்படுத்தக் கூடிய வகையிலே இன்னுமொரு சான்றினையும் மகாவம்சம் வழங்குகின்றது. விஜயன் இலங்கைக்கு வருகை தந்த சம்பவத்தை கூறமுற்பட்ட மகாவம்சம் விஜயனுடன் கூடி "உபதில்லை" (உபதிஷ) என்ற பெயரிலே வந்த பிராமணரைப் பற்றிய குறிப்பினை தந்துள்ளது. ஈழத்திற்கு வந்து இவன் தரிசித்த திருத்தலங்கள் பற்றிய குறிப்புகளையும் தந்துள்ளது.

இவன் தரிசித்த திருத்தலங்களாக திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம் நகுலேஸ்வரம் தொண்டேஸ்வரம் போன்றன குறிப்பிடப்படுகின்றன. இத்திருத்தலங்களில் தொண்டேஸ்வரம் தவிர்ந்த ஏனையவை இன்றும் இதே பெயருடன் அழைக்கப்படுகின்றன. இவற்றை அடிப்படையாக வைத்து ஈழத்திற்கு விஜயன் வருகைக்காலமான கி.மு. 5ம் நூற்றாண்டிலேயே இந்துமதம் சிறப்புற்று விளங்கியுள்ளது என, கருத்துக் கொள்ளலாம்.

எனவே ஐதீகக் கதைகள், ஈழத்தின் வரலாற்று இலக்கியங்கள் என்பவற்றைக் கொண்டு நோக்கும் போது இதிகாச சம்பவங்கள் நடைபெற்ற வரையறை செய்து கூறமுடியாத காலத்திலேயே சிறப்புடைய மதமாக இந்து மதம் விளங்கியுள்ளது என்பதனையும் இதிகாசங்கள் தந்த கருத்துக்கள் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. தனித்துவமான தொன்மைச் சிறப்பைக் கொண்டு விளங்கிய இந்துமதம் புராதன காலத்திலேயே இருந்துள்ளது என்று இதிகாசங்கள் தரும் கருத்துக்கள் மூலம் அறுதியிட்டுக் கூறமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் நெறி விழாவிற்கு

# எனது நல்வாழ்த்துக்கள்

## திரு. கா. பாண்டியராஜன்

பதுருகல குரூப்

பதுரெலிய

வீடு கட்டும் போது சாரம் அவசியம். ஆனால் வீடு கட்டி முடிந்துவிட்டால், சாரத்தைத் தேடுபவர் யாருமில்லை. அதுபோல ஆரம்பத்தில் உருவ வழிபாடு அவசியமாக இருக்கிறது. பின்னர் அவசியமில்லை.

- பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (இந்து) மதம் என்பது......

"மதம் என்பது வெறும் சடங்குகள் அல்ல; வெறும் வரட்சியான வேதாந்தப் பேச்சுக்கள் அல்ல; வெறும் அபிடேகங்களும் பூசைகளும் அல்ல; வெறும் தொழுதல் - விழுதல் - எழுதல் என்ற உடல் அசைவுகள் அல்ல; மதம் என்பது பரம் பொருளைத் தெளிவாக உணர்வது, உணர்ந்த பின் அந்தப் பரம் பொருளாகவே மாறுவது" என சுவாமி விவேகாநந்தரின் உபதேசங்களினின்றும் அறிய முடிகின்றது.

சமூக பரிணாமத்தின் அடிப்படையில் மதம் ஒரு வாழ்க்கை முறை எனக் கொள்ளப்படுகின்றது.

"மனிதன் மத வெறியுடையவனாக இல்லாமல் மதப் பற்றுடன் வாழப் பழக வேண்டும்."

**ஷாமேன் பெட்றீசியா பாலச்சந்திரன்**
மத்திய பிரிவு -
இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை
களுத்துறை

---

## கருத்துக் குவியல்....

"இலட்சியத்திற்காக எதையும் இழ ஆனால் எதற்காகவும் இலட்சியத்தை இழக்காதே."

கெட்டவர்களாக வாழ்ந்து நன்மை அடைவதைவிட நல்லவர்களாக வாழ்ந்து ஒன்றும் அடையாவிட்டாலும் பரவாயில்லை.

அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு என்ன நேருகின்றது என்பதல்ல. அதைக் கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதே.

உதவாத பொருளை பெற முயன்று வெற்றி பெறுவதைவிட நல்ல பொருளைப் பெற முயன்று தோல்வி அடைவது மேல்"

**பிரேமகலா சுப்ரமணியம்**
இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை
மத்திய பிரிவு - களுத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்ட அருள் நெறி விழாவிற்கு

# எனது நல்வாழ்த்துக்கள்

## திரு. கோபால் இராமேஸ்வரன்

மீகாகொட்டுவ
குளியாப்பிட்டிய

*பரிசுத்தமான மனம் உடைய ஒருவன் எல்லாவற்றையும் பரிசுத்தமானதாகவே காண்கிறான்.*

*- அன்னை ஸ்ரீ சாரதாதேவி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய காலகட்டத்தில் அறநெறியின் போக்கு

- செல்வி புனிதா செல்வராஜ் -

"அறத்தினூ உங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறுத்தலின் ஊங்கு இல்லை கேடு"

எல்லா மதங்களும் கூறுவது தர்ம நெறி தனையே. அதைப் பின்பற்றும் சமூகமே அவற்றுக்கு இழுக்கு ஏற்படுத்துகிறது. அறக் கருத்துக் களைக் கற்று கற்பிப்பது மாத்திரம் கடமையல்ல. அவற்றின் படி வாழ்வதே ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தாரின் பண்பாகும். எம்மதமும் நம்மதம்" என பலி பாவங்களுக்கு அஞ்சி அறவாழ்க்கை வாழ்வது சிறப்பாகும்.

அன்பே வழியாகக் கொண்ட அரும் நெறியாம் எம் சிவநெறியின் உண்மை, நேர்மை, பொறை யுடைமை, அன்புடைமை ஆகிய அறங்களைக் கற்பித்துக் கடைப் பிடிக்கச் செய்வதே அறநெறிப் பாடசாலையாகும். இது பல நலன் விரும்பிகளாலும் சைவப் பற்றுடை யார்களாலும், சைவ நிறுவனங்களா லும் வழங்கப் படும் ஒத்துழைப்பால் சிறப்பாக நடாத்தப்படுகிறது. 1989ம் ஆண்டு முதன் முதல் ஆரம்பிக்கப் பட்டாலும் 1993ம் ஆண்டின் பிறகே அது பரவலாக நடைமுறைப்படுத்தப் பட்டது. தர்மநெறியைக் கடைப் பிடித்து நல்ல சமூகத்தை உருவாக்கி சைவம் தழைக்க அறநெறிப் பாடசாலைகள் பெரிதும் வழிவகுக்கின்றன. சீரழிந்து சீர்கெட்ட இந்து சமூகத்தை பாரறி யத் தட்டியெழுப்பத் தோன்றினார் வீரத் துறவி விவேகானந்தர். அன்றவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடனாகத் தோன்றி சைவம் தழைக்க கிளர்ந்தெழா திருந்தால் இன்று சைவம் என்று ஓர் சமயம் உண்டா என உலகம் வியக்குமளவிலிருந்திருக்கும்.

அன்று முதல் இன்று வரை ஏதோ ஒரு வடிவில் சைவம் விளங்க இந்த அறநெறி எனும் வகுப்பு சிறிதாவது வழி செய்திருக்கிறது. இன்று நாடளாவிய ரீதியில் அறநெறி வகுப்புகள் நடந்து வருகின்றன. இந்து சமய கலாச்சார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவல்கள் திணைக்களமும் தமது உயிர் முழு மூச்சையும் இதற்காகச் செலவிட்டு முயற்சியுடன் அறநெறிப் பாடசாலைகளை நடாத்த ஊக்கு வித்து வெற்றியும் கண்டுவிட்டனர். இதனை நடாத்தும் ஆசிரியர்களும் "மக்கட் தொண்டே மகேசன் சேவை" எனும் விவேகானந்தரின் வாக்கை வேதவாக்காகக் கொண்டு சிரமம் என எண்ணாது இன்முகத் துடன் "யாம் பெற்ற செல்வம் பெருக இவ்வையகம்" எனுமாறு அறநெறிக்கு உழைத்து வருகின் றனர்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ச ரின் பேரில் இயங்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாரும் இந்து கலாச்சார ராஜாங்க அமைச்சும் இலவசமாக நூல்களை அச்சிட்டு பாடநெறிகளை முறையாகப் பயிற்றுவிக்க உதவு கின்றனர். அத்துடன் வருடம் இருமுறை சகல ஆசிரியருக்கும் பண்ணிசை வகுப்புக்களையும் பயிற்சி வகுப்புக்களையும் நடாத்தி சிறு தொகையை வழங்கி அவர்களை ஊக்குவித்து தர்மம் சிறக்க வழி செய்து வருகின்றனர்.

ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது அல்லவா? மாணவர் கற்றதை பாடசாலையில் நடக்கும் பரீட்சைக்காக மாத்திரம் பயன்படுத் தினால் அதில் எந்த விதப் பயனுமில்லையே. எனவே அறநெறி யில் கற்கும் மாணவர்களுக்கு நடை முறையில் ஒழுகவும் இவ்வகுப்புக்களில் பயிற்சி நெறிகள் வழங்கப்படுகின்றன. ஆலய வழிபாடு, மாலை கட்டுதல், சைவப் பண்புகளைக் கடைப்பிடித்தல், மந்திரம் ஓதுதல், தியானப் பயிற்சி என்பவற்றை நடைமுறைச் செயற்பாடுகள் மூலம் கற்பிக் கின்றனர். தற்போதைய சமூகம் அதைக் கடைப்பிடிக்குமா என நாம் அங்கலாய்க்கும் அளவில் அவர்கள் இழிந்தவர்களல்லர் எனுமாறு நடைமுறையில் வாழ்ந்து காட்டு கின்றனர்.

அன்று அழியும் தறுவாயில் இருந்த சைவம் இன்று மிளிரும் தன்மையடைய அறநெறி வழிவகுத் துள்ளது. குற்றுயிராய்க் கிடந்த சைவம் புத்துயிர் பெற்று நித்தமும் விளங்க புத்தம் புது வசந்தகாலம் வெகு தொலைவிலில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் நெறி விழா

இசையால் இறைவனைக் காணும் களம் இது - எம்
அருள் நெறியால் இனிய தமிழைக் காக்கும் களம் இது
தமிழ் களுத்துறையில் அழிந்து விடவில்லை
என்பதை எடுத்துக் காட்டும் களம் இது
உன்னை உருவாக்கிய சிற்பிகளுக்கு
நன்றி உரைக்கும் களம் இது

மாணவர் தம் திறமையை வெளிக்கொணரும் களம் இது
ஆசிரியர்களை ஊருக்கு அறியப்படுத்தும் களம் இது
உன் சேவை இப்பார் முழுவதிலும் பெருகிட - புது
மாற்றத்தை ஏற்படுத்தும் களம் இது
சகோதர இனமெல்லாம் உன் வரவை - ஆவலுடன்
எதிர்பார்த்துக் காத்திருக்கும் களம் இது
களுத்துறை வாழ் தமிழ் சமூகம் நன்றி உரைக்க
மனதில் உறுதி எடுத்த களம் இது.

களுத்துறையில் தோன்றிய இக்களம் - இலங்கை
முழுவதும் சமாதானம் ஏற்படுத்தப் போவது உறுதி
உன் சேவை இன்னும் நூற்றாண்டு கடந்து
வண்ணத் தமிழ் மணத்துடன் வாழ வளர
எம் இனிய தமிழ் வாழ்த்துக்கள்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!
வாழ்க அருள்நெறி!! வளர்க அருள்நெறி!!

பீ. பாமா
மகா ஹீனடியங்கல
களுத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி விழாவிற்கு
எனது நல் வாழ்த்துக்கள்

# வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு
# தொடர்பு கொள்க..

❋
❋❋
❋❋❋

# எஸ். செல்லத்துரை

லோமன்ட் தோட்டம்
கமகொட, களுத்துறை.

நெருப்புக்கும் அதன் எரிக்கும் சக்திக்கும் உள்ள தொடர்புபோன்றது பிரம்மத்துக்கும் சக்திக்குமுள்ள தொடர்பு.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறவாத இன்ப அன்பு வேண்டும்

தெய்வ நம்பிக்கை உடையவர்கள் தாம் வாழும் வாழ்வினை ஒரு சுமையாகக் கருதுவது இல்லை. ஏனெனில் தமது மனத்திலுள்ள எந்தப் பாரத்தினையும் ஆண்டவன் என்கிற சுமைதாங்கியின் மீது இறக்கி வைத்துவிட்டால் அவர்களுக்கு நிம்மதி அன்றி வேறு என்ன ஏற்பட முடியும்? அந்த நிலையில், அம்மனிதன் தனது வாழ்வினை மனத்துணிவோடு எதிர்நோக்கும் வன்மையைப் பெறுகிறான். "நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு" என்னும் கூற்றுக்கு அமைய வழிபாட்டிலும் பிரார்த்தனையிலும் தமது மனத்தைப் பதிக்கும் போது தெளிவற்ற நெஞ்சமும் தெளிவுபெறுகிறது. சலனம் அடையும் உணர்ச்சிகள் சாந்தி பெறுகின்றன. மனப்போராட்டங்கள் அமைதி பெற்று சாந்தியடையும் போது மன அமைதிக்கு இறைவனே பொறுப்பு என்ற பாதுகாப்பு உணர்வு ஏற்பட்டு எம்மைப் பாதுகாக்கும் அரணாகத் திகழ்கின்றது.

இறைநம்பிக்கை ஆண்டவனை உணரும் ஆன்மீக நெறியாகும். நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் என்றும் எந்நிலையிலும் ஆண்டவனின் நினைப்பு இருப்பவர்களுக்கு எத்துன்பமும் அணுகமாட்டாது என்பது சான்றோர்களின் கூற்றாகும். கடவுளை நினைப்பது, அவன் நாமத்தை உச்சரித்து, அவன் புகழ்பாடி அவனை வேண்டுதல் யாவுமே உண்மை பக்தர்களது அருட்செயல்களாகும்.

எனவேதான் அபிராமிபட்டரும் தன்னுடைய பாடலடிகளில்,

"நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவதுன்மலர்த் தாளெழுதாமறையி
னென்று மரும் பொருளேயுமையே யிமயத்
தன்றும் பிறந்தவளேயழியா முத்தியானந்தமே

என்று பாடியுள்ளார்.

எத்தனை இடர் வந்தாலும் இறை நாமத்தை மறவாது உச்சரித்து வருபவனே உண்மையான இறைபக்தன் ஆகின்றான். குடும்ப வாழ்வில் ஈடுபட்டவர்கள் கூட அந்த இறைவனை உள்ளன்புடன் நினைத்து அவரது அருட்பாடல்களைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய அன்பினைத்தான் நாம் இறைவனிடம் யாசித்துப் பெற வேண்டும் இதனையே காரைக்கால் அம்மையாரும் இறைவனிடம் இறவாத இன்ப அன்பு வேண்டும் எனப் பிரார்த்தித்து வேண்டினார். இறவாத இன்ப அன்பு என்பது எந்நேரமும் இறைவனை மறவாத அன்பு எனலாம். இதனால் கீதையில இருந்து அருட்பாடல்வரை இதிகாசங்களில் இருந்து தேவாரத்திருவாசக திவ்ய பிரபந்தங்கள் வரை, வேதங்களிலிருந்து சித்தர்கள் இயற்றிய பாடல்கள் வரை எத்தனையோ பக்திப் பனுவல்கள் எம் மொழியில் தோன்றிவிட்டன. இவ்விதமான படர்ந்த விழுதுகள் பல பெற்ற எம் மதம் என்னும் நிழலில் அடைக்கலம் புகந்த எவரும் கைவிடப்படமாட்டார்கள் என்பதும் உண்மையே. இறைவன் என்னும் பெருங்கருணைத் திறத்தில் திளைத்து இனிப்பிறவாப் பெருவாழ்வும் பெற முடியும் என்பதும் உண்மையே.

மனிதராகப் பிறந்த எமக்குக் கைகொடுத்து உதவுவனவாக எம் மதத்தில் எத்தனையோ நாமங்கள் உள்ளன. "ஓம் என்னும் பிரணவம், நமசிவாய மந்திரம், ஸ்ரீராம ஜெயம் எனப் பல நாமங்களை நாம் கூறிக் கொள்ள முடியும்.

ஓம் என்னும் பிரணவமந்திரம் அண்டகோடிகள் யாவற்றுக்கும் பிறப்பிடமாகின்றது. இந்த உலகம் பிரணவத்தில் தோன்றி அதில் நிலைபெற்று, கடைசியில் அதிலேயே ஒடுக்கமும் பெறுகின்றது. இதனால் தான் விநாயகப் பெருமான் பிரணவ உருவம் தாங்கி அருள் புரிகின்றார். அதனால் பிரணவ சொரூபன் ஆகின்றான். இந்தப் பிரணவ மந்திரத்தில் ஏனைய சகல நாமங்களும் அடங்குவதால் இந்த மந்திரத்தினை நாம் வாய்விட்டு உச்சரிக்கப் பழக வேண்டும். அந்த நாமத்தில் எம் மனம் லயிக்கும்போது இறைசிந்தனை வலுவடைகின்றது. இதனை மணிவாசகர்

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன் அடி
என்மனத்தே வழுவாதிருக்க வேண்டும்"

என வேண்டுகிறார். "நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சன நீர் பூசை கொள்ள வாராய் பராபரமே" என வேண்டுகிறார் தாயுமானவர். எனவே நாமும் இறையருளை இறைவனிடம் வேண்டிப் பெறுவோமாக.

*தொகுப்பு: திருமதி ரி. சந்திரவதி சிவராஜா*
மலபட கலைவாணி அ. நெ. பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் கடமைகள்

1. காலையில் 5 மணிக்குள் நித்திரை விட்டு எழுதல்.
2. எழும்பும் போதும் குளித்தபின், உணவு உண்ணும் போதும் கடவுளின் பெயரை மனதில் கூறுதல்
3. அன்புடனும் நம்பிக்கையுடனும் நெற்றியில் திருநீறு பூசுதல்.
4. உங்களது பூசை அறையில் அல்லது சுவாமி படத்திற்கு முன் தினமும் வணங்குதல்.
5. சமய சொற்பொழிவுகளைக் கேட்டல், சமய நிகழ்ச்சிக்கு செல்லுதல். சமய புத்தகங்களை வாசித்தல்.
6. கஷ்டப்படும் ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும் சிறிதளவேனும் உதவி செய்தல்.
7. வீட்டில் ஒவ்வொரு நாளும் விளக்கேற்றி பூ வைத்து இறைவனை வணங்குதல்.
8. வெள்ளி, செவ்வாய் போன்ற விசேட நாட்களிலும் திருவிழாக் காலங்களிலும் கட்டாயம் கோயிலுக்குப் போதல்.
9. ஏனைய நாட்களில் கோயிலுக்குச் சென்று கோயில் சுறறுப்புறத்தை தூய்மைப்படுத்தல்.
10. இந்து சமயத்தை அறிந்த பெரியோர்கள், ஞானிகள், துறவிகளிடம் உங்கள் சந்தேகங்களைக் கேட்டறிதல்.
11. "இராமகிருஷ்ண விஜயம்" போன்ற ஆன்மிக, சமய சஞ்சிகைகளை மாதம் ஒரு முறை வாங்கிப்படித்தல்.
12. இந்துக்களை மதமாற்றம் செய்ய முயற்சிக்கும் கயவர்களை விட்டு விலகியிருத்தல்.
13. நமது மதம் தொன்மையானது அன்புமயமானது அறிவு பூர்வமானது இறைவனிடத்தில் நம்மை சேர்ப்பது என்பதில் நம்பிக்கை கொள்ளுதல்.
14. நான் ஒரு இந்து என்பதில் பெருமை கொள்ளுதல்.
15. ஏழை எளியோர்க்கு உதவிகள் பல செய்தல்.

~ தொகுப்பு: வே. தம்பிராஜா
கொடஹேனை.- நேபொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் நெறி விழாவிற்கு

எமது நல்வாழ்த்துக்கள்

**எஸ். இரவி**

குருரி, குருப்

தெபுவன

உலகில் பற்றுதல் குறையுமளவிற்கு மனதில் அமைதி வளரும்

- அன்னை ஸ்ரீ சாரதாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீறு

உடலை இயக்குவது உயிர். உயிருக்கு உயிராக நின்று அதனை இயக்குபவன் இறைவன். அவனை நினைப்பூட்டும் சின்னங்களே சிவசின்னங்கள். அவற்றுள் சிறப்புற்று விளங்குவதே திருநீறு. இது விபூதி, சாரம், ரட்சை, பஷிதம். பஸ்மம் என்றெல்லாம் போற்றப்படுகிறது. சைவசமயிகளின் உடம்பிலே அவசியமாகத் தரிக்க வேண்டிய அடையாளம் விபூதி ஆகும். விபூதி என்றால் பசுவின் சாணத்தை அக்கினியாலே எரித்து உண்டாக்கிய சாம்பல் ஆகும். திருநீற்றின் வெண்மை நிறம் தூய்மையைக் குறிக்கின்றது.

திருநீற்றை நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து "சிவசிவ" என்று சொல்லிக் கொண்டு வலது கை நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும். திருநீற்றின் மகிமையினைப் புகழ்ந்து பாடியவர் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார். ஆவார். திருநீற்றினை வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நின்று தரிக்க வேண்டும்.

பசுவானது பல்வகைத் தன்மையது. அது ஒரு நிலைப்படுவது என்பது கடினமான விடயம். பசு அன்பு, பாசம், கோபம் என்பவற்றுள் திழைத்து ஆணவம் பீடிக்கப்பட்டு இருக்கும். பசுவானது இறைவனைச் சாரும்போது ஆணவம் வழிகெட்டு மனம் ஒரு நிலைப்பட்டு அலைபாய்வது கட்டுப்படுத்தப்படும். இந்நிலை நீடிக்கும் போது முத்தி பேறு அடைய பசு தூண்டப்படும்.

அலைமோதும் பசு திருநீற்றைத் தரிக்கும் போது தூய்மைப் பெறுகிறது. இவ்வாறு திருநீறானது அகத் தூய்மை புறத்தூய்மை இரண்டிற்கும் இன்றி அமையாததாகக் காணப்படுகிறது. இது சாம்பலாகக் காணப்படுவதால் பஸ்மம் எனவும் இரட்சித்துக் காப்பதால் இரட்சை எனவும் புனிதத் தன்மை பொருந்தியதால் திருநீறு என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்து என்பவன் பிறந்தது முதல் இறக்கும் வரை திருநீற்றை அழியாச் சொத்தாக மதித்துத் தரித்து வரலாம். எவரும் அபகரிக்க முடியாது. திருநீறு தரித்து அதனை மதித்து அதன் புனிதம் போற்றி வாழ்ந்த காரணத்தாலே உயர்வான புகழுடன் உய்வு பெற்ற எமது சமயத்தின் பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றை நோக்கின் திருநீற்றின் மகிமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை எமக்கு நன்கு புலனாகும்

அவர்களுள் அப்பர், சம்பந்தர், ஏனாதிநாதர், மெய்ப்பொருள் நாயனார், சேரமான் பெருமான் ஆகிய சில நாயன்மாரது சரிதங்களை நோக்குங்கால் திருநீற்றைப் பற்றி அனுபவத்தால் மட்டுமா அறிய முடியும் எனத் தோன்றும்.

முதலில் நாம் மெய்பொருள் நாயனாரின் வரலாற்றை நோக்குவோம்.

சேதி நாட்டை மெய்ப்பொருள் எனும் அரசர் செங்கோன்மையுடன் இறை பக்தி சிறக்க ஆட்சி செய்து வந்தார். அவர் சுந்தரமூர்த்தி நாயனாரின் உற்ற நண்பராக திகழ்ந்தார். எதிரிகளேயற்று இவரது ஆட்சி காணப்பட்டாலும் இவரது இறை நம்பிக்கையையும் பக்தியையும் பொறாத ஒருவனும் காணப்பட்டான். அவன் முத்தநாதன் என்னும் ஓர் கயவன். அவன் பலமுறை மெய்ப் பொருள் நாயனாருடன் மோதிப் பார்த்தான். எனினும் அவரது பலத் திற்கும் ஆண்மைக்கும் வலிமை க்கும் முத்தநாதனால் ஈடுகொடுக்க முடியாது போய்விட்டது. அத்துடன் அரசருக்கு பலத்த பாதுகாப்பை காவலர் மூலமாக மக்கள் ஏற்படுத்தியிருந்தனர். எனினும் திருநீற்றுக்கும் அதனை அணிந்தவருக்கும் இவ்வரசர் கொடுக்கும் மதிப்பு காரணமாக அவர் சிவனடியாரைத் தடுக்காது உள்ளே அனுமதிக்குமாறு காவலருக்கு பணித்திருந்தார். இதனை அறிந்த முத்தநாதன் ஒரு உபாயம் செய்தான். புலியாகிய கயவன் பசுத்தோல் போர்த்தான். நெற்றி முதல் உடலெங்கும் திருநீறு தரித்தான். சிவனடியாரைப் போல உடைதரித்தான். கையில் சுவடி ஏந்தி பையில் கத்தியைச் செருகித் தோளில் மாட்டி அரண்மனை வாயிலைக் கடந்து அரசரது அறை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவரது மெய்க்காப்பாளன் குறிப்பறிந்தவன் போல் அந்த பசுத்தோல் போர்த்த புலியைத் தடுத்து நிறுத்தினான். என்றாலும் பயனில்லை. காரணம் அரசர் சிவனடியாரை அனுப்புமாறு கட்டளையிட்டதால் மெய்க்காப்பாளன் ஒதுங்கிக் கொண்டான். முத்தநாதன் விரைந்து அரசருக்கு ஒரு மந்திரம் உபதேசிக்க இருப்பதாகக் கூறி அறையுட் சென்றார். பையில் நூலை எடுப்பான் போல் கத்தியை எடுத்து அரசர் எதிர்பாரா சூழ்நிலையில் உடலில் செருகினான். சத்தம் கேட்டு மெய்க்காப்பாளன் விரைந்து வந்தான். அவன் கண்ட காட்சி ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தநாதனை மடக்க முற்பட்டான். ஆனால் அரசரது சைகைக்குப் பணிந்து அரசரை நோக்கி விரைந்தான். இதற்குள் ஊரே இவ்வடயம் காட்டுத்தீ என பரவி விடவே முத்தநாதனைப் பலர் சூழ்ந்து விட்டனர். அரசர் "என் மீது நீங்கள் பக்தி கொண்டவர்களாயின் இவரை எந்தச் சேதமுமின்றி ஊரெல்லையில் சேர்த்து விடுங்கள்" எனக் கூற அனைவரும் அவ்வேண்டு தலுக்கு பணிந்தனர். முத்தநாதன் எவ்வித இடையீடுமின்றி ஊரெல்லை சேர்க்கப்பட்டான்.

இக்கதையை நாம் கூர்ந்து பார்த்தோம் என்றால் திருநீறு எத்தகைய புனிதம் பொருந்தியது என உணர்வோம். இவ்வாறே ஒருமுறை சைவம் தழைக்க வேண்டுமென மங்கையற்கரசியார் சம்பந்தர் பெருமானைத் தம் நாடேகுமாறு வேண்டினார். சமண சமயத்தில் திழைத்திருந்த பாண்டிய மன்னன் சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குத் தீமூட்டப் பணித்தான். அவர் பதிகம் பாடி இறைவனைப் பிரார்த்தித்து அதிலிருந்து தப்பினார். அத்தீ பாண்டியனுக்கு வெப்பு நோயாக மாறியது. மன்னன் சமண மாந்திரீகம், வைத்தியம் சகலதும் செய்தும் பலன் கிட்டாது போகவே சம்பந்தரை நாடிப் பணிந்து இரஞ்சினான். உடனே சம்பந்தர் திருநீற்றைக் கையிலெடுத்து திருநீற்றுப் பதிகம் பாடினார். உடனே வெப்புநோய் நீங்கப் பெற்ற பாண்டியன் சைவத்தை தழுவிக் கொண்டான். இங்கும் திருநீற்றின் மகிமையே புலப்படுத்தப்படுகின்றது.

ஒரு சைவ சமயிக்கு அடையாளமாக அமைவது திருநீறேயாகும். மேலே கூறிய கதைகளில் வருணிக் கப்பட்ட நாயன்மாரைப் போலவே ஏனைய நாயன்மாரும், சிறப்பாகக் கூறுவோமாயின் இவர்கள் புகழ் பெற்றதற்குக் காரணம் திருநீறே யாகும் என்ற முடிவுக்கு நாம் வரலாம். இக்கதைகளிலிருந்து திருநீற்றின் மகிமை எமக்குப் புலப்படுகிறது. திருநீற்றைத் தரிக்கும் நாம் ஒவ்வொருவரும் திருநீற்றின் மகிமையினை உணர்ந்து சைவம் தழைத்தோங்க உழைப்போமாக!

ஓங்குக சைவம்
நீங்குக துன்பம்!

**செல்வி. ராஜு அச்சலா சுகந்தினி**
ஆண்டு - 8, (மத்தியபிரிவு)
இந்துமாமன்ற அறநெறிப்
பாடசாலை.
புலத்சிங்கள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்ட அருள் நெறி விழா
சிறப்புற
எனது நல்வாழ்த்துக்கள்

# M. RAMAR

OFFICER OF INCHARGE

RUHUNUHELIYA ESTATE
NEBODA
KALUTARA SOUTH.

பரிசுத்தமான மனம் உடைய ஒருவன் எல்லாவற்றையும் பரிசுத்தமானதாகவே காண்கிறான்.

- அன்னை ஸ்ரீ சாரதாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்துச் சுவைத்தவை

# இன்டர் நெட்டில் இந்து

இந்து கலாசாரத்தை உலகம் முழுவதும் உள்ளவர்கள் எளிதில் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்து மதம் பற்றி இன்டர்நெட்டில் தகவல்கள் புகுத்தப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் உள்ள இந்து கோவில்கள், இந்துக்களின் பழக்க வழக்கங்கள் இந்துவில் உள்ள பல்வேறு சடங்குகள், திருமண முறைகள் வழிபாடு விதங்கள், பூஜை பற்றிய குறிப்புகள் திருவிழாக்கள் மற்றும் இந்து மதம் தொடர்பாக வெளிவந்துள்ள புத்தகங்கள் போன்றவை அந்த வெப்சைட்டில் கிடைக்கும்.

இந்துக்களின் பாரம்பரிய பெருமையை உணரச் செய்யும் வகையில் அந்த வெப்சைட் உள்ளது. நீங்கள் இன்டர் நெட்டில் புகுந்து விளையாடு பவராக இருந்தால் இந்து மதம் பற்றிய தகவல்களையும் பாருங்கள். உங்களுக்கு தெரியாத பல புதிய தகவல்கள் கிடைக்கலாம்.

இதோ முகவரி...

Http:
w.w.w.hindunet.org.



**தகவல்:**
**செல்வி. லலிதா செல்வராஜ்**
**மாணிக்கவாசகர் அறநெறிப் பாடசாலை**
**மத்துகம.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் நெறி விழா சிறப்புற

# எமது பிரார்த்தனைகள்



❋
❋❋
❋
❋
❋

## திரு. திருமதி கணேஷன் திலகவதி
## குடும்பத்தினர்.

**பன்னில்கந்த பிரிவு**
**வெலிப்பென்ன**

*வீடு கட்டும் போது சாரம் அவசியம். ஆனால் வீடு கட்டி முடிந்துவிட்டால், சாரத்தைத் தேடுபவர் யாருமில்லை. அதுபோல ஆரம்பத்தில் உருவ வழிபாடு அவசியமாக இருக்கிறது. பின்னர் அவசியமில்லை.* - **பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுரைகள் சில

1) அகிலத்தில் எம்மை
அவதாரம் செய்ய வைத்த
அன்னை தந்தையை அன்போடு நடத்து
அதை விட வேறு சுகமே இல்லை!

2) கொஞ்சும் தமிழோடு
மிஞ்சும் பல கலை தந்த
குருவை மனதார மதி
கொடி கட்டிப் பறப்பாய்!

3) பெரியோரைக் கனம் பண்ணி
அரிய உரைகள் கேட்டால்
பெயர் பல பெற்று
பெருமையோடு வாழ்வாய்!

4) அறநெறிப் பாடசாலை சென்று
நெறி தவறாச் சமயம் கற்று
ஆத்மீக அறிவு பெற்றால்
ஆத்ம திருப்தி அடைவாய்!

5) எல்லாம் அவன் செயல்
என்பதை எண்ணத்தில் கொண்டு
ஆண்டவனை வணங்கு
அமைதியைக் காண்பாய்.

**செல்வன்: ரா. அருண்தர்ஷன்**
கீழ்ப்பிரிவு
புளத்சிங்கள இந்து மாமன்றம்
அறநெறி பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி விழாவிற்கு

எமது நல் வாழ்த்துக்கள்

**திரு. எஸ். சண்முகம்**

சில்லறை வியாபாரி

அரப்பலாகந்த தோட்டம்
தெபுவன.

அச்சமே மரணம். அச்சத்திற்கப்பால் நீ போக வேண்டும்.
- சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விரதம்

~ செல்வி வனிதா செல்வராஜ் ~ புலத்சிங்கள அ.நெ.பா. ~

சக்தி விரதங்களிலே தலையா னது நவராத்திரி விரதம். இது புரட்டாதி மாதம் வளர்பிறை பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாட்கள் அனுட்டிக்கப்படும். (நவராத்திரி ஒன்பது இரவுகள்). பத்தாம் நாளான் விஜயதசமியையும் சேர்த்து வட இந்தியாவில் இவ்விழாவைத் "தசரா" என்பர். இந்துக்கள் வாழ்கின்ற எல்லா இடங்களிலும் இந்நோன்பு நோற்கப்படுகிறது.

ஒன்பது தினங்களில் முதல் மூன்று தினங்கள் துர்க்கையையும் அடுத்த மூன்று தினங்கள் இலக்குமியையும் இறுதி மூன்று தினங்கள் சரஸ்வதி யையும் வழிபடுவது வழக்கம். ஒன்பதாம் நாள் இரவு ஆயுத பூசை நிகழும். ஒவ்வொருவரும் தாம் தாம் பயன்படுத்தும் ஆயுதங்களையும் கருவிகளையும் புத்தகங்களையும் பூசையில் வைத்து வழிபடுவர். "செய்யுந் தொழிலே தெய்வம்" என்னும் தத்துவத்தை ஆயுதபூசை விளக்குவதாக உள்ளது.

நவராத்திரி ஒன்பது நாள்க ளும் காலையில் நீராடித் தேவியைப் பூசிப்பர். தினமும் ஒன்று முதல் பத்து வயதுக்கு உட்பட்ட கன்னிப் பெண்க ளைக் குமாரி, கல்யாணி, ரோகிணி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்திரா ஆகிய தேவியின் அம்சங்களாகப் பாவிததுப் பூசித்து உணவு, உடை, அணிகலன் முதலியவை கொடுத்து வழிபாடாற் றலும் வழக்கம். இந்நாள்களில் லலிதா சகஸ்ரநாமம், சகலகலா வல்லி மாலை, அபிராமி அந்தாதி, மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் ஆகிய தேவி தோத்திரங்களைப் பாராயணம் பண்ணி வருதல் பயன் தரும்.

நவராத்திரியின் இறுதி நாளான விஜயதசமி அன்று கொண்டாடும் மற்றுமொரு விழாவே மானம்பூத் திருவிழா. இந்த மானம்பூத் திருவிழா கொண்டாடு வதற்கான கார ணத்தை விளக்கும் கதையொன்று கீழே:-

முன்னொரு சமயம் மகிடா சுரன் என்றொரு அரசன் இருந்தான். அவன் காட்டெருமை வடிவம் படைத்தவன். அவனை அசுரர்கள் "மகிடன்" என்று சுருக்கமாக அழைப்பர். மகிடன் தேவர்களுக் கும், மனிதர்களுக்கும், முனிவர் கட்கும் பல இன்னல்கள் செய்து வந்தான். அவனது இன்னல்களைத் தாங்க முடியாது எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியிடம் சென்று முறையிட்டனர். உடனே தேவி சிவன், சக்தி, துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி, பிரம்மா, விஷ்ணு ஆகியோரின் சக்திகளில் சிலவற்றைப் பிரித்தெடுத்து, அவற்றை ஒன்றாக்கி சண்டிகாதேவி என்னும் பெயரில் மகிடனை அழிக்கச் சென்றார்.

சண்டிகாதேவி மகிடனுடன் கடும் போர் புரிந்தாள். ஈற்றில் சண்டிகா தேவியுடன் போரிட முடியாமல் மகிடன் ஓடி ஒரு வன்னி மரத்தில் ஒளித்துக் கொண்டான். இதையறிந்த சண்டிகாதேவி அவ்வன்னி மரத்தை ஒரே வெட்டில் மூன்று துண்டுகளாக வெட்டினாள். மகிடன் இறந்தான். உலகம் மகிழ்ந்தது. இதன் நினைவாகவே மானம்பூத்திரு விழாவின் போது ஆலயங்களிலே வன்னி மரம் அல்லது வாழைமரம் நாட்டி அதனை ஒரே வெட்டில் மூன்று துண்டுகளாக வெட்டித் திருவிழா எடுப்பர்.

இவ்விழா ஓர் தத்துவத்தை விளக்கு கிறது. ஆன்மாக்களை பீடித்து வரும் ஆணவமலம், அறியாமை, மிருகத்தன்மை முதலியவற்றை மகிடாசுரனை சங்காரம் செய்வது போல் அடியார்களும் விளக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுது ஆன்ம ஞானம் கைகூடும் என்பது தாற்பரியம். நவராத்திரி விழாவை இந்துக்களின் கலைத் திருவிழா என்றே கூறலாம். அழகிய பொம்மை கொலுவைத்தல் போன்ற கலை அம்சங்களுடன் கலையுணர்ச்சி பெருக அவ்விழாவைக் கொண்டாடுவர். சிறப்பாக நவராத் திரியின் இறதி மூன்று நாள்களும் கலையம்சத்தில் சிறந்தவை.

கல்விக்கும் கலைகளுக்கும் அதி தேவதை சரஸ்வதி, கல்வியும் கலைகளும் உள்ளத்திற்கு இன்பம் அளிப்பவை. அழகுணர்ச்சியுடன் கூடியவை. எனவே கலைமகள் விழாவைப் பாரதத்திலும் ஈழத்திலும் வாழும் இந்துக்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர். வாழ்க்கை என்பது ஒரு கலையே. அதிலும் அழகுக்கு நாம் முதலிடம் கொடுக்க வேண்டும்.

ஏட்டுப் படிப்பிற்கு மாத்திரமின்றி, உழவுத் தொழில், கைத் தொழில் முதலிய எல்லாவற்றுக்கும் அருள் செய்பவள் கலைமகள் உண்மையிலே வெவ்வேறு தொழில்களையும் நாம் வெவ்வேறு கலைகளாகவே போற்றி வாழுதல் வேண்டும். அதுவே தொழிலில் இன்பம் காணுவதற்கு வழியுமாகும். (விஜயதசமி அன்றுதான் அஞ்ஞான வாசம் செய்த பஞ்சபாண்டவர்கள் வன்னி மரத்தில் ஒழித்து வைத்திருந்த ஆயுதங்களை எடுத்து பூஜித்து பாரதப் போரில் வெற்றி பெற்றதாக புராணம் கூறுகிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புருடார்த்தங்கள்

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கும் புருடார்த்தங்கள் ஆகும். இவை ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்து மானிட வாழ்க்கையுடன் ஒன்றிக் காணப்படுகின்றது. ஒருவர் அறவழியில் நின்று ஒழுகி பொருளை ஈட்டி, இன்பம் அனுபவிதது, வீபேற்றினை அடைவது "புருடார்த்த வழி" ஆகும். அந்த புருடார்த்தங்களை சற்று விரிவாக உற்று நோக்குவோம்.

அறம் ஒன்றுதான் அழிவில்லாதது. மண், விண், கடல், கதிர், மதி முதலிய அனைத்தும் அழிந்து போகும். தேன் கெடாது, அது தன்னில் விழுந்த பொருட்களையும் கெடாமல் காப்பது போல, அறம் என்ற ஒன்று எவ்போதும் அழிவற்றதாகி நின்று அறம் புரிவோரையும் அழிவின்றிக் காத்தருள்கின்றது. இவ்வாறான அறத்தைப் பற்றி, நாலடியார் "பயன்பட வாழும் வாழ்க்கை நயன் உடையதாகும்" என்றும், ஔவையார் "அறம் செய விரும்பு" என ஆத்திசூடியிலும், தெய்வப் புலவர் "திருவள்ளுவர்" திருக்குறளில் "அறன் வலியுறுத்தல்" எனும் பத்து குறட்பாக்களிலும் குறிப்பிட்டுப் பாடியுள்ளனர்.

புருடார்த்தங்களில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது பொருள் எனப்படும் செல்வமாகும். இச்செல்வமானது எவ்வேளையிலும் "செல்வோம் செல்வோம்" என்றே இருக்கின்றது. "செல்வ வாழ்க்கை முன்பு அல்லல் சேர்க்கை பின்பு" என்றும், "செல்வம் நிலைக்கும் என்று செருக்கு கொள்ளாதே" ஒரு பருக்கை சோற்றுக்கு தெருத்தெருவாக அலையும் காலம் வரும்" எனவும் கூறியுள்ளது. இவ்வாறான பொருளைத் தேடும் பொழுது அறவழியில் நின்று தேடுதல் வேண்டும். இதனையே ஔவையார் கொன்றை வேந்தன் எனும் பகுதியில் "வறுமை வந்து வாட்டினாலும் மனம் தளராமல் நற்பண்பைக் காத்து வந்தால் அது எமக்கு செல்வத்தைச் சேர்ப்பிக்கும்" எனவும், "நிலையில்லாத செல்வம் உள்ள பொழுது, இருப்பவர்களுக்கு அன்னபானீயங்களைக் கொடுத்து வருபவருக்கு சித்த சுத்தி உண்டாகும்" எனவும் நல்வழி என்னும் அதிகாரத்திலும் கூறியுள்ளார்.

அடுத்ததாக இன்பத்தினை எடுத்துக் கொண்டால் அதனை சிற்றின்பம், பேரின்பம் என இரண்டாக வகுக்கலாம். பேரின்பம் துறவு நிலையிலிருந்து இறைவனை அடைவது ஆகும். சிற்றின்பம் இல்லற வாழ்வில் ஈடுபட்டு அறவழியல் பொருள் தேடி, இன்பம் அனுபவித்து வீடு பேற்றை அடைவதைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இன்பத்தினை திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகின்றார். "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்ட தால் வருவதே இன்பம்". மேலும் ஒளவையார் நல்வழி எனும் பகுதியில் அம்மி துணையாக வாறிழந்த வாறொக்கும்" எனும் செய்யுளில் விபச்சாரியைப் புணர்ந்தவன் கைப்பொருளை இழந்து மேக நோயால் வருத்தமுற்றுப் பழி பாவங்களை அடைவான் என்றும், "நண்டு சிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்திற்" எனும் செய்யுளில், "ஒருவன் பிறர் மனையினிடம் இன்பம் அனுபவிக்கின், அது அவனிடத்துள்ள ஞானம், செல்வம், கல்வி எனும் மூன்றும் கெடதற்கு அறிகுறியாகும்" என்று திற்பட இந்த இன்பத்தினைப் பற்றிக் கூறியுள்ளார்.

மேலுள்ள புருடார்த்தங்களை உற்று நோக்கும் பொழுது, மானிடராய்ப் பிறந்த நாம் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினாலும் அறம் புரிந்து, மங்களகரமான செல்வத்தினை நல்வழியில் பெற்று, அவற்றை மக்களுக்கு தான தருமம் செய்து, அதன் மூலம் மேலும் பொருளீட்டி, இன்பம் அனுபவித்து இறுதி வரையும் மகிழ்ச்சியாக வாழ்ந்து மோட்சத்தினை அடையலாம். இதனையே ஒளவையார் நல்வழி என்னும் அதிகாரத்தில், "இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே" என்னும் செய்யுளில் "நிலையில்லாத உடம்பு உள்ளபோதே சற்பாத்திரததிலே தானஞ் செய்தவருக்கு அந்தத் தருமத்தினாலே சற்குருவினது திருவருளும், அந்தத் திருவருளினாலே ஞானமும், அந்த ஞானத்தினாலே முக்தியும் சித்திக்கும் என்று கூறியுள்ளார். மேலும் அவர் "சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்" எனும் பாடலில் "சிவத்தியான முடையவருக்கு விதி இல்லை என்றும் சிவ்தியான மில்லாதவருக்கு விதி உண்டு என்றும் கூறியுள்ளார்.

எனவே நாமும் இந்த புருடார்த்த வழியில் சென்று, முக்தியைப் பெற்று, இறைவனின் திருவடிகளை அடைவோமாக!

*ப. சாந்தி*
*ஆசிரியர்*
இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை, களுத்துறை

பக்தி என்பது என்ன?
பக்தியே பகவான் அல்லது கடவுள் பக்தி என்பது வடமொழி. பக்தி என்பதற்கு தமிழில் அன்பு என்பது பொருளாகும். பக்தி என்பது கடவுள் குரு போன்றவரிடம் வைக்கும் அன்பு மரியாதையாகும். அன்பே தெய்வம் அன்பே கடவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ இந்துவே . . .

உலகில் உள்ள ஒவ்வொரு தேசத்திலும் அந்தந்த தேசத்தின் இயற்கைக்குப் பொருத்தமாகவே உயிரினங்களும் தாவரங்களும் மனித இனங்களும் அமைகின்றன.

மனிதர்களின் நிறம். உடலமைப்பு முதலிய புறத் தோற்றங்கள் மாத்திரமன்றி அகத் தோற்றமாகிய அறிவு, உணர்வு, முதலியனவும் அந்தந்த இடங்களுக்கு ஏற்றால் போல் அமைகின்றன.

இதனை, இந்து சமய கோட்பாட்டின் அடிப்படையில் கூறுவதானால் நமக்குப் பொருத்தமான தனு, கரண, புவன போகங்கள் முன்னமே நம் வினைக்கு ஏற்ப அமைந்து கிடக்கின்றன.

அது அன்று; ஆனால் இன்று நமக்குப் பொருத்தமற்ற அந்நிய உணவுகள், அந்நிய உடைகள், அந்நிய மருந்து வகைகள் அந்நிய மொழிகள் என்பன புகுந்து நமது அகத்தையும், புறத்தையும் மாசுபடுத்தி நோய்வாய்பபடுத்தி இருப்பதை நம்மவர்களில் படிததவர்களும் இன்னும் உணரவில்லை.

அதுமட்டுமா மதமாற்றங்களை எடுத்து நோக்கும் போது இந்த பூமியில் தோன்றி மறைந்த எந்த ஒரு ஞானியாவது தத்தம் மதங்களுக்கு மற்றைய மதத்தினரை மத மாற்றம் செய்ய வேண்டுமெனக் கூறியதுண்டா? தாம் இறையருளால் பெற்ற அருளை மக்கள் நலன்கருதிப் பரப்புங்கள் என்று சொன்னார்களேயன்றி, மத மாற்றம் செய்யுங்கள் என்று அவர்கள் எங்கையாவது கூறியதாக இல்லை.

உலகில் உள்ள மதங்களில் தொன்மை வாய்ந்தது இந்து மதமாகும். இந்து மதத்திலில்லாத தத்துவமோ, சமய நெறிகளோ, கலை, கலாசாரச் செழுமையோ வேறு எந்த மதத்திலும் இருப்பதாக நான் அறியேன். மதங்களின் ஆட்சி அதிகாரமோ, ஆட்சியினரின் ஆதரவோ இன்றி தனித்துவமாக இயங்கி மற்ற மதத்தினரையும் அரவணைத்து செல்வது எமது இந்து மதமே.

இலங்கைக்கு பௌத்தம் வருவதற்கு முன் இங்கு வாழ்ந்த மக்கள் யாவர்? அவர்களின் மதம் யாது? இன்று இலங்கையில் வாழும் இலங்கைத் தமிழர்களினதும், சிங்கள மக்களினதும், காடுகளில் ஒதுங்கி வாழும் வேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தவர்களினதும் முன்னோரே இங்கு வாழ்ந்த மக்களாவர், இவர்கள் எல்லோரும் ஓரினத்தவராகவே வாழ்ந்து வந்துள்ளனர்.

இலங்கை முழுவதும் இந்து மதம் பரவியிருந்தமைக்கான சான்றுகள் பல உண்டு இலங்கையின் நாலாப்பக்கங்களிலுமுள்ள பழமைவாய்ந்த திருக் கோயில்களே இதற்கு சான்று பகருகின்றன.

இந்து சமய மக்கள் மதம் மாறி இந்து சமயம் பலவீனப்பட்டு இறுதியில் இலங்கையில் இந்து சமயமே அழிந்தபின் இந்து பரிபாலன சங்கங்கள், இந்து அறநெறிப் பாடசாலைகள் இருக்க முடியுமா? பழம் பெருமை வாய்ந்த திருக்கோயில்களின் கதி என்ன? இலங்கையில் இந்து சமயத்தை அழித்தவர்கள் என்று வருங்காலம் கூறும் பழிச் சொல்லை நாம் ஏற்றுக் கொள்ளப் போகிறோமா?

இந்நிலையில் இன்று தொடக்கமாவது எமது சமயத்தை காக்க விரும்பினால்; இந்து சமய மன்றங்களின் நிர்வாகத்திற்கும்; ஆலோசனை வழங்கத்தக்க இந்து சமய தொண்டர்களுக்கும் உங்களின் ஒத்துழைப்புக்களை வழங்கி அவர்கள் மூலம் - இலங்கையில் இந்து சமயத்திற்கு புத்துணர்ச்சி ஊட்டச் செய்வோம்.

**வடிவேர் சசிகுமார்**
(பொறுப்பாசிரியர்)
ஞான சம்பந்தர் அறநெறி பாடசாலை
எலதுவ.

## பதினெண் புராணங்கள்

அவையாவன; பிரம புராணம், பதும புராணம், வைணவ புராணம், சைவ புராணம், பாகவத புராணம், பவிடிய புராணம், நாரதீய புராணம், மார்க்கண்டேய புராணம், ஆக்கினேய புராணம், பிரமகைவர்த்த பராணம், இலிங்க புராணம், வராக புராணம், காந்த புராணம், வாமன புராணம், மற்ச புராணம், கூர்ம புராணம், காருட புராணம், பிரமாண்ட புராணம் என்பன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள

## இந்து ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள், இந்து நிறுவனங்கள்

## (களுத்துறை மாவட்டம்)

- தொகுப்பு: ஆ. சுகேந்திரன் -

| ஆலயத்தின் பெயர்<br>களுத்துறை/தொடங்கொட | முகவரி | பதிவு இலக்கம் |
|---|---|---|
| 1. ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் | இல. 105, பழைய வீதி<br>வேலாப்புரம், களுத்துறை | HA/6/KAL/3 |
| 2. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் | கிளைட் அரச தோட்டம்<br>கல்கெட்டிய பிரிவு, களுத்துறை | HA/6/KAL/8 |
| 3. ஸ்ரீ கந்தசுவாமி கோவில் | பிரதான வீதி, பாணந்துறை | HA/6/KAL/2 |
| 4. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் | துடுகலை தோட்டம், நேபொட | HA/6/KAL/18 |
| 5. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் | என்ஸாவல அரசினர் தோட்டம்<br>போம்புவல | HA/6/KAL/20 |
| 6. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் | கிலைட் தோட்டம், தெபுவனை | HA/6/KAL/21 |
| 7. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் | குலோடன் தோட்டம்<br>பழைய பிரிவு, நேபொட | HA/6/KAL/26 |
| 8. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் | பொல்காகந்த தோட்டம்,நேபொட. | HA/6/KAL/34 |
| 9. ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் | குலோடன் அரச தோட்டம்<br>புதிய பிரிவு, நேபொட | HA/6/KAL/35 |
| 10. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் | குலோடன் தோட்டம்<br>நேயின்ன பிரிவு, நேபொட | HA/6/KAL/36 |
| 11. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் | கீகியனகந்த தோட்டம்<br>கிழக்குப் பிரிவு, நேபொட | HA/6/KAL/42 |
| 12. கபரலகந்த கம்பார ஸ்ரீ சித்த சூனியம் (ஐயனார்) கோவில் | இல. 34, 36, சாரபூமி<br>மலாகம வீதி, வாதுவை | HA/6/KAL/43 |
| 14. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் | ரெங்கலாகந்த தோட்டம், நேபொட | HA/6/KAL/45 |
| 15 ஸ்ரீ சிவசுப்ரமணிய கோவில் | கீகியனகந்த தோட்டம், கீழ்பிரிவு<br>புள்ளுமலை நகரம், நேபொட. | HA/6/KAL/46 |
| 16. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் | குலோடன் தோட்டம்,<br>கொடஹேன பிரிவு, நேபொட. | HA/6/KAL/52 |
| 17. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | கல்கடுவ தோட்டம், -<br>நேபொட | HA/6/KAL/51 |
| 18. ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் - | பயாகல தோட்டம், தொடங்கொட | HA/6/KAL/53 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆலயத்தின் பெயர் மத்துகம / அகலவத்தை | முகவரி | பதிவு இலக்கம் |
|---|---|---|
| 19. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | அஸ்க்வெலி அரச தோட்டம் - பதுரெலிய | HA/6/KAL/5 |
| 20. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | மலபட தோட்டம், மத்துகம - | HA/6/KAL/6 |
| 21. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | டெலகிட் தோட்டம், பதுரெலிய - | HA/6/KAL/10 |
| 22. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | மத்தேகெதர அரச தோட்டம் - பழைய பிரிவு, மத்துகம | HA/6/KAL/14 |
| 23. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | பள்ளேகொட அரச தோட்டம் - தர்காநகர். | HA/6/KAL/16 |
| 24. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | பிம்புற அரச தோட்டம், - அகலவத்தை. | HA/6/KAL/17 |
| 25. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | பதுரகல தோட்டம், பதுரெலிய.- | HA/6/KAL/19 |
| 26. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | மொகமதி தோட்டம், - மேற்பிரிவு, பதுரெலிய | HA/6/KAL/22 |
| 27. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | டெல்கித் அரச யாக்கம் - கொம்வெல் டிவிசன். பதுரெலிய | HA/6/KAL/23 |
| 28. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | வோகன் அரச தோட்டம் - இத்தகொட பிரிவு, மத்துகம | HA/6/KAL/24 |
| 29. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | அன்னாசிகல அரச தோட்டம் - மத்துகம | HA/6/KAL/25 |
| 30. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | வோகன் தோட்டம் - டிகல பிரிவு. மத்துகம | HA/6/KAL/27 |
| 31. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | அம்பேதென்ன அரச தோட்டம் - மத்துகம. | HA/6/KAL/28 |
| 32 ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | கலேவத்தை தோட்டம் - அகலவத்தை | HA/6/KAL/29 |
| 33. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | அம்பேதென்ன தோட்டம் - பாந்திய பிரிவு, மத்துகம. | HA/6/KAL/30 |
| 34. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | பிரின்ஸ்லியின் டிவிசன் - லப்பநீதுர, பதுரெலிய. | HA/6/KAL/32 |
| 35. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | டாட்டன்ட் பீல்ட், அகலவத்தை | HA/6/KAL/33 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேங்காய் உடைப்பது ஏன்?

திருமணக் காலத்திலும் கோயில்களில் அபிஷேக ஆராதனைகளின் போதும் தேங்காயை பயன்படுத்துவதன் தத்துவம் என்ன தெரியுமா?

"தேங்காய் மனிதனின் உருவமாகும். தேங்காயிலிருக்கும் மூன்று கண்களில் இரண்டு பொய்யானவை. ஒன்றுதான் மெய்யானது. அதே போன்றே மனிதனுக்கு இருக்கும் இரு கண்களும் பொய்த் தோற்றத்தையே காணுகின்றன. தேங்காயின் உட்பகுதியை போன்றே இனிப்பான மெய்த்தோற்றத்தை வெளிப்படுத்த வேண்டுமெனின் வெளி ஓட்டை உடைத்துத்தானாக வேண்டும். அப்படி உடைத்து எறிவதன் மூலம் இளநீரைப் போன்ற மென்மையாக இருக்கும் மனிதனது ஆன்மா முடிவில்லாததும் அறிந்து கொள்ள முடியாததுமான மெய்ஞ்ஞானத்துக்கு அருகாக வந்துவிடுகிறது. இவ் உண்மையை புலப்படுத்துவதற்காகவே இந்துக்கள் தேங்காய் உடைப்பதை சம்பிரதாயமாக கொண்டுள்ளனர்.

***தொகுப்பு: திருமதி இரஞ்சனி மனோகரன்***
*மலபட த.வி.*

## புத்தி பெரிதா

புத்தியானது வாழ்க்கைப் போரில் வெகுதூரம் நம்முடன் வராது. ஆபத்தான சமயத்தில் நழுவிவிடும். சிரத்தையே, நன்னம்பிக்கையே, புத்தியைவிட சிறந்த துணை, ஒருவன் தான் புத்திசாலி என்ற அகங்காரத்தை அறவே ஒழித்து ஆண்டவனிடம் தம்மை அர்ப்பணம் செய்த பின்னரே அந்த நம்பிக்கை நிலை பெறுகிறது

***(காந்திஜி)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி விழாவிற்கு
எனது நல் வாழ்த்துக்கள்

# P. VIJEYARATNAM

(BATA SHOP MANAGER-AMBALANGODA)

**AMBATENNE**
**TEACHER'S QUARTERS**
**MATUGAMA .**

கடவுளைச் சரணடைந்தவன் தான் காப்பாற்றப்படுவான்.
– அன்னை ஸ்ரீ சாரதாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**களுத்துறை மாவட்ட அருள்நெறி விழா குழுவின் தலைவரும்**
**களுத்துறை இந்து இளைஞர் மன்ற தலைவருமான**

## திரு. எஸ் ரி. சதாசிவம்,

**அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

இலங்கை திருநாட்டின் களுத்துறை மாவட்டம் தன்னிகரில்லா தனி சிறப்பு பெற்ற புண்ணிய பூமியாகும், மலை வளமும், மண் வளமும் வற்றா நதி வளமும் அலை கடல் வளமும் கொண்ட திவ்விய பூமி.

பாரம்பரியமும் பண்பாட்டுச் சிறப்பும் மிக்க இம்மாவட்டத்தில் தொண்டு தொட்டே தமிழும் சமயமும் மேலோங்கி சீரும் சிறப்புடன் விளங்கி வந்துள்ளமையை சரித்திரத்தின் வரிகளில் காணக் கூடியதாக உள்ளது. ஆதியில் களுவன்துறை என்ற நாமத்தால் விளங்கிய துறைமுக பட்டினமே இன்றைய களுத்துறை நகராகும். களுத்துறை நகரில் வற்றா வள நதியாக சங்கமிக்கும் களுகங்கையின் படுக்கையில் முன்னர் பாணர் குடிகள் வாழ்ந்து பண்பாடிய இன்றைய பாணந்துறை நகரையடுத்த வேலாபுரம் என்னும் முருகனின் திருக்கோயிலும், அதனை அடுத்து பத்தினி அம்மனின் கோயிலும் அமைந்திருந்தன. கால ஓட்டத்தில் நதி தீரத்தில் அமைந்திருந்த இவ்வாலயங்கள் இன்று மாறுப்பட்டு விளங்குகின்றன.

சூரனோடு போரிட்ட வேலவன், வேற்படையை தாங்கி நின்ற தலமே "வேலாபுரம்", களுத்துறையிலிருந்து வேல்கொண்ட முருகனுக்கு கதிர்காம திருத்தலம்வரை வழிநெடுகிலும் முருகன் ஆலயங்கள். கட்டுக்குருந்த முருகன் ஆலயம் அன்னை காளிகாம்பாள் கடலோரம் கோயில் கொண்டு விளங்கிய காலி நகரில் கிட்டங்கியில் முருகன் ஆலயம், தெவுந்தரை என்னும் தேவன்துறை ஆகிய இன்றைய மாத்தறை நகரில் முருகன் ஆலயம் அம்பாந்தோட்டையில் முருகன் ஆலயம் இப்படியே களுத்துறையிலிருந்து கதிர்காமம் வரை முருகனின் அருள்திறத்தினை உணர்த்தும் முருகன் திருக்கோயில்கள் இன்றைய தெவுந்தரை நகரிலேயே கடல் கொண்ட தொண்டீஸ்வரம் அமைந்திருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இன்றும் தெவுந்துரையில் வைஸ்ணவ மரபினை உறுதிப்படுத்தும் விஸ்ணு ஆலயம் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியர் வருகையோடு பாரிய மாற்றங்களுக்கும் புது பொழிவுக்கும் உற்பட்ட கரையோரத்தையும் மலைப்பகுதியையும் உள்ளடக்கிய களுத்துறை மாவட்டம் பல மாறுதல்களுக்கு உட்பட்டது. குறிப்பாக ஐரோப்பியர் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையை ஆரம்பித்தபொழுது இம்மாவட்டத்தில் குடியேறிய இந்திய தமிழ் தொழிலாளர்கள் தாம் வாழ தொடங்கிய தோட்டங்களில் எல்லாம் வழிப்பாட்டு தலங்களை அமைத்தனர். இவைகளில் பெரும்பாலானவை முத்துமாரியம்மன் ஆலயங்களும் முருகன் பிள்ளையார், திருக்கோயில்களும் ஆகும். தொன்றுதொட்டே இந்துக்களாக விளங்கிய இங்கு குடியேறிய தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் பக்தி உணர்வு மிக்கவர்கள், கலைகளை போற்றி வளர்க்கும் கலாநயமிக்க மாந்தர்கள், தமிழ் பாரம் பரிய பண்பாட்டில் ஊறித் திளைத்தவர்களாவர். எனவே இவர்கள் களுத்துறை மாவட்டத்தில் ஆலயங்களை அமைத்து சமய கலாசார விழுமியங்களை பேணி பாதுகாத்ததில் வியப்பில்லை.

இன்றைய களுத்துறை மாவட்டம், களுத்துறை, மத்துகம, தொடங்கொட, இலங்கை இறப்பர் பயிர்ச்செய்கையின் பிள்ளையார் சுழியாக விளங்கும் அகலவத்தை, புலத்சிங்கள, ஹொரண ஆகிய தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை உள்ளடக்கியதுடன் பாரிய இறப்பர், தேயிலை தோட்டங்களையும் பின்புலமாக கொண்டதாக விளங்குகின்றது. களுத்துறை மாவட்டமே தென்மாகாணத்தின் காலி மாத்தறை நாக்கியாதெனிய, உடுகம, எல்பிட்டிய ஆகிய பகுதிகளில் வாழும் தோட்டப்பகுதி தமிழ் மக்களோடு தொடர்பு கொண்டதாக விளங்குவதோடு அரவணைத்துச் செல்லும் பாங்கினையும் கொண்டு விளங்குவது கண்கூடு.

இம்மாவட்டத்தில் 40 ஆயிரத்திற்கு அதிகமான இந்திய வம்சாவளி மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 99 சதவீதமானவர்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்வதுடன் ஏறக்குறைய 95% சதவீதமானவர்கள் இந்துக்களாவர். இம்மாவட்டத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் ஆரம்ப கனிஷ்ட சிரேஷ்ட பாடசாலைகள் உற்பட 40 பாடசாலைகளும் நகர்புறங்களில் 03 தமிழ் பிரிவு பாடசாலைகளும் உள்ளன. தோட்டப்பகுதிகளில், நூற்றுக்கு அதிகமான இந்து ஆலயங்கள் உள்ளன. நகர்புறங்களில் 10க்கு குறைவான இந்து ஆலயங்களே உள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் ஏறக்குறைய 37 அறநெறி பாடசாலைகள் இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பதிவுடன் விளங்க பல பாடசாலைகள் இதுவரை பதிவு செய்யப்படாமலும் இயங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்டத்தில் பாடசாலை செல்லும் இந்திய வம்சாவளி மாணவர்கள் சுமார் ஏழாயிரமாக விளங்க அறநெறி பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர் தொகை 3500 ஆக உள்ளது.

இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் ஏறக்குறைய 7 ஆண்டுகால பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட அறநெறி பாடசாலைகள் இந்து சமய அறிவினையும் இந்து கலாசாரத்தையும் வளர்ப்பதில் பெரிதும் வழிகாட்டியாகவும் ஆதார சுருதியாகவும் இப்பகுதியில் விளங்குகின்றன. இவ்வறநெறி பாடசாலை மாணவர்களையும் களுத்துறை மாவட்ட இந்து தமிழ் மக்களையும் அடிநாதமாக கொண்டு நடைபெறும் விழாவே. 1999ம் ஆண்டு களுத்துறை மாவட்ட அருள்நெறி விழாவாகும்., விழாக்கள் பல கண்ட களுத்துறை தமிழ் சமூகத்தின் எழுச்சிக்கும் பண்பாட்டு மேம்பாட்டுக்கும் எடுக்கும் இவ்விழாவனையொட்டிய சிறப்பு மலரான அருளமுதம் இதழுக்கு வாழ்த்துச் செய்தியினை அளிப்பதில் மட்டிலா மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த அருள்நெறிவிழா ஒரு பொழுதுபோக்குக்காக ஏற்படுத்தப்பட்டது அல்ல. சமூக நலன்கருதி அதன் நம் சமூகத்தின் நாடிதுடிப்பை நன்குணர்ந்து நம்பிக்கையும் புத்துணர்ச்சியும் ஊட்டவும் எதிர்கால பிரஜைகளாகிய நம் இளைய தலைமுறையினரை ஆக்கபூர்வமான வழியில் சிந்திக்கவும் வழிநடத்திச் செல்லவும் முன்னெடுக்கப்பட்ட பாரிய முயற்சியாகும்.

எமது எண்ணங்களோ ஆயிரமாயிரம், சிறகடிக்கும் சிந்தனைகளோ பல்லாயிரம். இறைவன் அருளாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும் நல்லோரின் ஒத்துழைப்பினாலும் இவற்றில் ஒரு சிலவற்றையேனும் நடைமுறைப்படுத்தி சமூதாய பணியாற்றியுள்ளேன் என திடமாக நம்புகின்றேன்.

"சிறியோரை மேம்படச் செய்தால் தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்" எல்லாவகையிலும் எம் அருள்நெறி விழா வெற்றி பெறவும் விழாமலரான அருளமுதம் சிறப்புறவும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது பணிவன்பான வணக்கத்தை தெரிவித்து சிரம் தாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்ட அருள்நெறி விழா சிறப்புற
எமது நல் வாழ்த்துக்கள்

# T. SURESH KUMAR

ARAPOLAKANDE - TEBUWANA
KALUTARA SOUTH

காலை மாலை சந்தியா காலமே கடவுள் வணக்கத்திற்கு ஏற்றது.
அப்போது மனம் பரிசுத்தமாக இருக்கும்.

- அன்னை ஸ்ரீ சாரதாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்ட

# அருள் நெறி விழா

## அருளமுதம் சிறப்பு மலர்



மலர் குழு:

திரு. எஸ். ரி. சதாசிவம்

திரு. ஆ. சுகேந்திரன்

திரு. வீ. தம்பிராஜா

திரு. எஸ். சுந்தரராஜ்

திரு. வீ. சசிகுமார்

இந்த இதழ்களில் ஊறும் இன்பத் தேனை
சுவைத்தின்புற்று பயனடையும் வண்ணம்
பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி விழாவிற்கு

## எமது நல் வாழ்த்துக்கள்



# Sangeetha Jewels

DEALERS IN 22KT GOLD JEWELLERY

සංගීතා ජුවල්ස් - சங்கீதா ஜீவல்ஸ்

**335, GALLE ROAD,**
**WELLAWATTE - COLOMBO 06**
**500682, 585321**

சர்வ சக்திவாய்ந்த கடவுளுடைய அருள் வந்தடையும் போது ஒவ்வொருவனும் தன் குற்றத்தைக் காண்பான். இதனைஅறிந்து நீ வீணாகத் தர்க்கம் செய்யாதே.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் நெறி விழா

பூப்படைந்த கொள்கைக்கு
பொட்டிட்டு தலைவாரி
யாப்படைந்த கொலுசு மிட்டு
அரவணைத்த திணைக்களமே
நீ வாழ்க!

கனவுகளில் சுயம் வரத்தை
நடத்தி!
மண மாலையிட்டு
நினைவுகளில் மொழியை
நித்தமும்
தித்திக்கச் செய்த
சித்திரத் தமிழ் மகனே
சிவ தொண்டா
திரு சதாசிவா
வாழ்க நின் புகழ்!
வளர்க உனது சேவை.

தொண்டே கடனென
துறையே சிவமென
நன்றே சேவை புரியும்
நல்லாசான்களே!
உங்களிடம் வரம் கேட்கின்றோம்
வளருங்கள் சைவமதை!
வாழியவே உங்கள் புகழ்!

நல்லதைச் செய்தால் - சில
நமன்களுக்குப் பிடிப்பதில்லையாம்
நம்பிக்கை இழக்காது
நடத்திடுங்கள் உங்கள் பணியை
உங்களைசிலர் உரசிப்பார்க்கவென
உருவெடுத்தாலும்
உள்ளங் கலங்காதீர்!
காரணம்
தங்கம் உங்கள் சேவை

உள்ளத்திலிருந்து கொடுத்து
உள்ளதெல்லாம் கொடுத்து
உயிரைக் கொடுத்தாலும்
நல்லாரை எப்போதும் நாடும்
போற்றாது! வீடும் போற்றாது.

அனைத்து துன்பத்திற்கும் - ஓர்
அரவணைப்புத்தானையா - இந்த
அருள்நெறி விழா!

**ஆக்கம்:**
**செல்வி புனிதா செல்வராஜா**
**ஆசிரியை**
இந்து மாமன்ற அறநெறிப்பாடசாலை
கோயில் வீதி - புலத்சிங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி விழாவிற்கு

## எனது நல் வாழ்த்துக்கள்

## செல்வி நாகரட்ணம் தமயந்தி

குளோடன் குரூப்

புதிய பிரிவு, நேபொட.

---

அருள்நெறி விழாவிற்கு

## நல் வாழ்த்துக்கள்

## எல். சிவலிங்கம்

பிரதம தொழிற்சாலை அதிகாரி

மில்லகந்த தோட்டம், புலத்சிங்கள.

இல்லம்: இரிகெட்டிய

நேபொட வீதி, மத்துகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமய நெறி

நல்லதம்பி கௌசல்யா - இந்து இளைஞர் மன்றம்
அறநெறிப் பாடசாலை, கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், களுத்துறை

எமது சமய நெறி சைவ நெறி. அது அன்பு நெறி. அன்பு வெள்ளமாகவே எங்கள் சமய நெறி எங்கும் பரந்து நம் அனைவருக்கும் நலந் தருகின்றது.

ஞானப் பால் உண்டு மூன்று வயதில் குழந்தை தேவாரம் பாடியது. ஞானக் குழந்தையின் தேவார மழலையிலே எங்கள் சமய நெறி தழைத் தோங்குகின்றது.

அன்பின் வழியது உயிர் நிலை - அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு"
என்பது பொய்யா மொழிப் புலவரின் கூற்று. அதாவது அன்பு உடையவர்களின் உடம்புதான் உயிரோடு கூடிய உடம்பு. அன்பில்லாதவர்களிடம் காணப்படுவது வெறும் எலும்புகளை தோலினால் போர்க்கப்பட்ட உடம்பு ஆகும்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"
இது திருமந்திரத்தில் திருமூலரால் அருளப்பட்ட கருத்தாகும். அதாவது எமது முழுமுதற் கடவுள், அன்புமயமானவர். அதன் சுருக்கம் "அன்பே சிவம்" என்பதாகும். அன்பு வேறு சிவம் வேறு அல்ல.

எமது சமய நெறியில் காணப்படும் சில சிறப்பம்சங்கள், எமது சமய நெறி கூறும் அறநெறிகள் தேவார திருவாசகங் களின் வழியாக மக்கள் அனைவரையும் தழுவி அவர்களது வாழ்வினை வளம்படுத்துகின்றன. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதற்கிணங்க ஆலயங்கள் பெருகுகின்றன. அதன் மூலம் அன்பு நெறியும் வளர்கின்றது. கால வரையறைக்குள் அடக்கிவிட முடியாத தொன்மை வாய்ந்த எங்கள் சமய நெறியின் உண்மைகள் தெளிவாகின்றன. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியான எங்கள் இறைவனைப் போன்றே எங்கள் சைவ நெறி சிறப்புத் தொன்மை வாய்ந்தது.

எமது சமய நெறியின் தொன்மையை பொருள் ஆராய்ச்சிகளாலும் இலக்கிய ஆய்வுகளினாலும்பிற வழிகளாலும அறிய அறிஞர் பலர் முயல்கின்றனர். அவர்களால் கூட சிந்து வெளி நாகரீகத்தினை அறிந்து கொண்டது முதல் தான் எமது சமய நெறியின் தொன்மையை அறிய முடிந்துள்ளது. அதற்கு அப்பாலும் எமது சமய நெறி கால வரையறையைக் கடந்து நிற்கின்றது என்பதனை நினைக்கும் போது உண்மையிலேயே சைவ சமயிகளாகிய நாம் நிச்சயமாக பெருமைக்குரியவர்களாவோம். இதனாலேதான் ஆராய்ச்சியாளர்கள் பலர் உலகிலேயே மிகவும் பழமை வாய்ந்த உயர்ந்த சமய நெறியெனச் சைவ நெறியைக் கூறுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்ட அருள் நெறி விழாவிற்கு

எமது நல் வாழ்த்துக்கள்



புத்தம் புதிய தமிழ், ஆங்கில
வீடியோ திரைப்படங்கள்

ஸ்ரீகாந்த் வீடியோ சென்ரர்

அரப்பலாகந்த, தெபுவன
களுத்துறை தெற்கு

SRIKANTH VIDEO CENTRE

ARAPOLAKANDE, TEBUWANA

KALUTARA SOUTH


மனமே எல்லாம். மனம் தூய்மையானாலன்றி ஒரு நன்மையும் விளையாது

- அன்னை ஸ்ரீ சரதாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கயவரை நாம் மிதிப்போம்

காலை இளங் கதிரே
கடைந் தெடுத்த இரத்தினமே
வாழை இளங் குருத்தே
வாடாத வெற்றிலையே
பிஞ்சு மனதின்
மேதமையை சொல்லி அழு

பள்ளிக்கு போகலையே
பாடம் படிக்கலையே
ஏடு எடுக்கலியே
எழுத்தாணி பிடிக்கலையே
என்று எண்ணி எண்ணி
ஏங்கி அழுதாயா

அப்பனுக்கு சோறு தூக்கி
மலை மலையா
அலைஞ்சதையும்
ஆத்தாளுக்கு புல் தூக்கி
அல்லல் பட்டதையும்
சொல்லாமல் உன் மனதில்
சேர்த்து வைத்து அழுதாயா

மாரி மழை அடிக்க
மழை காத்து சுழன்றடிக்க
தாங்காத லயக் கூரை
தவிடு பொடியாக
தூங்காத இரவின்
துயரத்தையா சொல்லி அழுதாய்

நாளும் நித்தம் குடித்தே
வாழும் நிலை மறந்தே
விலகங்கும் மேலென்றென்ன
கலங்குகின்ற நெஞ்சினாய்
கண்மழையை பெய்து நிற்க
காலமெல்லாம் அழுவதுதான்
கண்டபயன் வேறுண்டோ

கொதி தண்ணீர் கொட்டியுனை
குலை நடுங்க வைத்த - அந்த
கொழும்பு நோனாவையும்
கிள்ளி கிள்ளி உந்தன்
மேனியெங்கும் காய புள்ளியிட்ட
பொழுதை எண்ணிதான்
இப்ப புலம்புறியோ

அழுது அழுது நாம இங்கு
ஆக்கியது ஏதுமில்ல
தொழுது தொழுது நாம இங்கு
மாற்றியதும் ஏதுமில்ல
கண்ணீர துடைச்சி விடு
கயவரை நாம் மிதிப்போம்.

எஸ். ஜெயகுமார்
ஞானசம்பந்தர்
அறநெறிப் பாடசாலை
எலதுவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்துறை இந்து இளைஞர் மன்றத்தின்
ஏற்பாட்டில் நடைபெறும்
அருள்நெறி விழாவிற்கு

# எனது நல் வாழ்த்துக்கள்

# திரு. முருகேசு பத்மநாதன்

**அகலவத்த பிரதேச சபை உறுப்பினர்**

டெல்கித் குரூப்
இழுப்புவத்த பிரிவு
பதுரெலிய

ஆத்ம சாதன அபிவிருத்திக்கு அவசியமானவைகளுள் சத்சங்கம் (நல்லாரிணக்கம்) ஒன்றாகும்.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து இளைஞனே சிந்தை தெளிய வாராய்

அந்தமும் ஆதியும் இல்லாதது இந்து மதம்
பந்தமும் பாசமும் பொதிந்தது எங்கள் மதம்
மாந்தர் குலம் மேலோங்க வேதாந்த சிந்தனையும்
வேந்தன் செங்கோல் புரிய விரிவான தத்துவமும்
சாந்தமாய் வாழ்ந்திடவே சிந்தனைத் துளிகளும்
சேர்ந்ததே எங்களது சுந்தர இந்து மதம்
இத்தனையும் இருந்தும் நீ மந்தமாய் வாழ்வதேன்
இந்து இளைஞனே சிந்தை தெளிய வாராய்

இந்து சமயத் தொன்மையினை சிந்துவெளி கூறும்
கந்தன் புகழ் பாடிடவே வந்த நோயும் தீரும்
வந்த துயர் வழிபாட்டால் வந்த வழிப் போகும்
சந்தனமும் குங்குமமும் மங்களங்கள் கூட்டும்
வந்த வினை தூய வெண் திருநீற்றால் மாறும்
அந்தமிலா இந்துமதம் என்றென்றும் வாழும்
சந்தேகம் உந்தனது சிந்தை விட்டு அகலும்
இந்துமத இளைஞனே சிந்தை தெளிய வாராய்!

வந்த நோய் தீர்ந்திட வழிகளும் உண்டு
நொந்த மனம் தேறிட தியானமுறை உண்டு
சுந்தரர் பாடிய தோத்திரங்கள் உண்டு
சந்தமுடன் கூடிய சிந்துகளும் உண்டு
சம்பந்தர் காட்டிய ஞானநெறி உண்டு
சந்தேகந் தீர்த்திடவே சித்தாந்தம் உண்டு
மந்த நிலை ஏன் உனக்கு நண்பா?
இந்து இளைஞனே சிந்தை தெளிய வாராய்!
தொன்று தொட்டு வந்த இந்து பண்பாடு
இன்று நம்மில் தொலைந்து போகுது பாரு
சான்றுகளும் சாட்சிகளும் பல இருந்தும் கூட
குன்றிவரும் விந்தையினை கவனமுடன் கேளு
வென்று வரும் மதமாற்றக் கொடுமைகளைப் பாரு
நன்றே நீ இதையுணர்ந்து நம் மதத்தைப் போற்று
இன்று இந்த நிலை தோன்ற காரணங்கள் ஏது
இந்து மத இளைஞனே சிநதை தெளிந்து கூறு!

ஆக்கம்: சுப்ரமணியம் சுந்தர்ராஜ்
பொறுப்பாசிரியர்
மில்லக்கந்த புதிய பிரிவு, புலத்சிங்கள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி விழாவிற்கு

# எமது நல் வாழ்த்துக்கள்

# திரு. எஸ். கருப்பையா குடும்பத்தினர்

**டெல்கித் குரூப்**

**இழுப்புவத்த (பிரின்ஸ்லைன்) டிவிசன்**

**பதுரெலிய**

உனக்குப் பைத்தியம் பிடிக்குமானால் அது இறைவனிடம் கொண்ட அன்பால் உண்டாகட்டும். உலகப் பொருள்களுக்காகப் பைத்தியம் கொள்ளாதே.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களும் எழுதியவர்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அகத்தியம் .. .. | - | அகத்தியர் |
| 2. | நைடதம் .. .. | - | அதிவீராமபண்டிதர் |
| 3. | அபிராமி அந்தாதி .. | - | அபிராமிப்பட்டர் |
| 4. | திருப்புகழ் .. .. | - | அருணகிரிநாதர் |
| 5. | திருக்குற்றாலக்குறவஞ்சி | - | இராசப்பகலிங்கராயர் |
| 6. | சிலப்பதிகாரம் .. .. | - | இளங்கோவடிகள் |
| 7. | இறையனார் காவியம் .. | - | இறையனார் |
| 8. | சித்தாந்த அட்டகம் .. | - | உமாபதிசிவாச்சாரியார் |
| 9. | நல்வழி .. .. .. | - | ஔவையார் |
| 10. | திருமுருகாற்றுப்படை .. | - | நக்கீரர் |
| 11. | சகலகலாவல்லிமாலை .. | - | குமரகுரபரர் |
| 12. | சிவபுராணம் .. .. .. | - | மாணிக்கவாசகர் |
| 13. | பெரியபுராணம் .. .. | - | சேக்கிழார் |
| 14. | மனோன்மணியம் .. .. | - | சுந்தரம்பிள்ளை |
| 15. | யாழ்நூல் .. .. | - | விபுலாநந்தர் |
| 16. | குறிஞ்சிப்பாட்டு .. .. | - | கபிலர் |
| 17. | திருவாசகம் .. .. | - | மாணிக்கவாசகர் |
| 18. | இராமாயணம் .. .. | - | வால்மீகி, கம்பர் |
| 19. | மகாபாரதம் .. .. | - | வில்லிப்புத்தூரர் |
| 20. | மணிமேகலை .. .. | - | சீத்தலைச்சாத்தனார் |
| 21. | ஆசியஜோதி .. .. | - | எட்வின் ஆர் நொல்ட் |
| 22. | சத்தியசோதனை .. .. | - | மகாத்மா காந்தி |
| 23. | தேம்பாவணி .. .. | - | வீரமாமுனிவர் |
| 24. | பாஞ்சாலி சபதம் .. .. | - | சுப்பிரமணிய பாரதியார் |
| 25. | பரணி இலக்கியம் .. .. | - | சயங்கொண்டார் |
| 26. | ஒப்பிலக்கணம் .. | - | வீரமாமுனிவர் |
| 27. | நாச்சியார் திருமொழி .. | - | ஆண்டாள் |
| 28. | திருமந்திரம் .. .. | - | திருமூலர் |




**செல்வி. ரா. அச்சலா சுகந்தினி**
மத்தியபிரிவு
புலத்சிங்கள இந்துமாமன்ற
அறநெறிப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்நெறி விழாவிற்கு

# எமது நல் வாழ்த்துக்கள்

**ஆலய திருவிழாக்கள், விழாக்கள்,**
**மற்றும் விஷேட வைபவங்களுக்கு**
**ஒலிபெருக்கி, மின்சார ஒலி, ஒளி**
**தேவைகளுக்கு**

**தொடர்பு கொள்க**

# SPS

# எஸ். பெரியசாமி

டெல்கித் குருப்

**இழுப்புவத்த (பிரின்ஸ்லைன்) டிவிசன்**

**பதுரெலிய**


வீடு கட்டும் போது சாரம் அவசியம். ஆனால் வீடு கட்டி முடிந்துவிட்டால் சாரத்தைத் தேடுபவர் யாருமில்லை.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆலயத்தின் பெயர் மத்துகம / அகலவத்தை | முகவரி | பதிவு இலக்கம் |
|---|---|---|
| 36. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | பள்ளேகொட அரச தோட்டம் - கீழ்பிரிவு, தர்காநகர் | HA/6/KAL/38 |
| 37. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | அம்பேத்தென்ன தோட்டம் - கொலன்ராப் பிரிவு, மத்துகம. | HA/6/KAL/40 |
| 38. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | எலதுவ தோட்டம் - எலதுவ பிரிவு, மத்துகம. | HA/6/KAL/44 |
| 39. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | மத்:துகம தோட்டம், மத்துகம - | HA/6/KAL/47 |
| 40. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | பன்னில்கந்த தோட்டம் - வெலிப்பென்ன. | HA/6/KAL/50 |
| 41. ஸ்ரீ கதிரேசன் ஆலயம் - | ஆயுர்வேதவைத்தியசாலை வீதி, கன்னங்கரகம, மத்துகம. | HA/6/KAL/54 |
| 42. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - ஹொரண, இங்கிரிய | பெலாந்த தோட்டம், பதுரெலிய. | HA/6/KAL/55 |
| 43. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | றைகம் தோட்டம், இங்கிரிய. - | HA/6/KAL/1 |
| 44. அம்மன் ஆலயம் - | மிரிசேன அரச தோட்டம், மஹகம. | HA/6/KAL/4 |
| 45. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | இங்கிரிய பிரிவு, இங்கிரிய - | HA/6/KAL/9 |
| 46. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | தும்பற தோட்டம், இங்கிரிய - | HA/6/KAL/11 |
| 47. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | இங்கிரிய தோட்டம், கீழ் பிரிவு, இங்கிரிய. | HA/6/KAL/12 |
| 48. குறிஞ்சி மகா மாரியம்மன் ஆலயம் - | றைகம் மேற்பிரிவு, இங்கிரிய - | HA/6/KAL/07 |
| 49 ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | தும்பர இல. 01, பிரிவு இங்கிரிய. | HA/6/KAL/13 |
| 50. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | மில்லாகந்த, புளத்சிங்கள. - | HA/6/KAL/15 |
| 51. குன்றத்து ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் | எதுராகல தோட்டம், இங்கிரிய - | HA/6/KAL/31 |
| 52. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | போர்த் அரச தோட்டம் - களுபான பிரிவு, ஹொரண. | HA/6/KAL/37 |
| 53.: ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் - | மில்லகந்த தோட்டம், புதிய பிரிவு, புளத்சிங்கள | HA/6/KAL/39 |
| 54. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | திரிவானகெட்டிய தோட்டம் - கின்னர்ஸ்லி டிவிசன், மஹகம. | HA/6/KAL/41 |
| 55. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - | போர்த் தோட்டம் - மாப்புடுகல பிரிவு, ஹொரண | HA/6/KAL/49 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப் பாடசாலைகள்

| அறநெறிப்பாடசாலை - பெயர் களுத்துறை/தொடங்கொட | முகவரி | பதிவு இலக்கம் |
|---|---|---|
| 1. இந்து இளைஞர் மன்றம் அறநெறிப்பாடசாலை - | ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் 105, சிறில் டி சொய்சா வீதி, களுத்துறை. | HA/7/56/17/1 |
| 2. காந்தி இல்லம், அறநெறிப்பாடசாலை | குலோடன் தோட்டம், - நேஹின்ன பிரிவு, நேபொட. | HA/7/56/17/7 |
| 3. சுவாமி விபுலானந்தர் அறநெறிப்பாடசாலை - | களு/ அறப்பலாகந்த - தமிழ் வித்தியாலயம், தெபுவன. | HA/7/56/17/10 |
| 4. அபிராமி அறநெறிப்பாடசாலை - | குளோடன் தமிழ் வித்தியாலயம் நேபொட. | HA/7/56/17/23 |
| 5. நாவுக்கரசர் அறநெறிப்பாடசாலை - | களு/பயாகல தமிழ் வித்தியாலயம் தொடங்கொட. | HA/7/56/17/31 |
| 6. கலைமகள் அறநெறிப்பாடசாலை - | கொடஹேன பிரிவு, நேபொட - | HA/7/56/17/29 |
| 7. ஸ்ரீ வாணி அறநெறிப் பாடசாலை - | ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் குலோடன் தோட்டம் கொலன்ராப் பிரிவு, நேபொட | HA/7/56/17/11 |
| மத்துகம அகலவத்தை | | |
| 8. டெல்கித் இந்து மன்றம் அறநெறிப்பாடசாலை - | டெல்கித் தோட்டம் - பதுரெலிய | HA/7/56/17/2 |
| 9. அஸ்க்வெலி அறநெறிப்பாடசாலை - | அஸ்க்வெலி தோட்டம், மத்துகம | HA/7/56/17/3 |
| 10. இந்து இளைஞர் மன்ற அறநெறிப்பாடசாலை - | மத்தேகெதர தோட்டம், மத்துகம | HA/7/56/17/4 |
